1360

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 JUN 1928

Reg No. M2147

THE "AGRICULTURIST"

A monthly Journal d… Agriculture and its allie…

"கிருஷி…

ஓர் மாதாந்தர விவசாயப் பத்தி…

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 JUN 1928
MADRAS

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

Vol. XI புத்தகம் XI	விபவ ௵ ஆனி ௴ 1௳ 1928-ம் ௵ ஜூன் ௴ 14௳	**No. 3** ஸஞ்சிகை 3

CONTENTS	PAGE	பொருளடக்கம்	பக்கம்
Late Mr. J. SRIRANGARAJU	49	காலஞ்சென்ற ஜெ. ஸ்ரீரங்கராஜு	49
Artificial Manures	50	செயற்கை எருக்கள்	50
Sugarcane	54	கரும்பு	54
Indian Sugar Bureau	57	இந்திய சர்க்கரை பீரோ	57
Replies to Queries	60	கடித வினாவுக்கு விடைகள்	60
Correspondence	65	கடிதம்	65
News & Notes	71	குறிப்புகள்	71
Almanack	72	பஞ்சாங்கம்	72

Editor Rao Bahadur J. Chelvarenga Raju
"Jagannadha Baugh" Saidapet.

Annual Subscription Including Postage Re ONE Only

[Copy Right] [Registered]

ஜெயரங்கன்

J. R. ரங்கராஜா

அவர்களால்எழுதப்படும் புது நாவல் அச்சிலிருக்கிறது கூடிய ஜல்தியில் வெளிவரும்

தமிழ்ப் பேராசிரிய

மாகறல்—கார்த்திகேய முதலியார்

அவர்கள் இயற்றிய

மொழிநூல்

இந்நூல் பண்டைத்தமிழ் நூலாராய்ச்சி செய்வோருக்கும் சரித்திர ஆராய்ச்சிக் காரருக்கும் பெரும்பயன் தருவது. தமிழில் இதுகாறும் எவராலும் இயற்றப்படாத அரிய பெரிய புது நூல் தமிழின் கண்ணுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் தெளிவாய் உற்பத்தி முதலியன எடுத்துக் கூறுவது. தமிழேயன்றி மற்றைப் பாஷைகளிலுமுள்ள சொற்களின் உற்பத்தி முதலியவற்றைத் தெரிந்து கொள்வதற்கும் சாதனமாயுள்ளது.

உயர்ந்த நல்ல பளபளப்பான காகிதத்தில் அச்சிடப் பட்டிருக்கிறது. தமிழறிந்த ஒவ்வொருவர் கையிலும் அவசியமாக விருக்க வேண்டியது. இதன் விலை காலிகோ கட்டடம் ரூ. 2

மா-மா- இராமசுவாமி முதலியார்
பழந்தமிழ்ப் புத்தகசாலை.
கிண்டி, சைதாப்பேட்டை போஸ்டு,
சென்னை.

கம்மபாலன்.

தமிழ் மாதப் பதிப்பு

தென்னாட்டில் கம்ம ஜாதிப் பத்திரிக்கை இஃதொன்றே. கிராவாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு. வருட சந்தா ரூ. 1 தான்.

ஐக்கிய சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தகபாரங்கள் எம்மிடம் கிடைக்கும்.

R. வெங்கடசாமி நாயுடு.
பத்திராதிபர் கம்மபாலன்
திருத்தாங்கல்.

THE "AGRICULTURIST"

A monthly Journal devoted to Agriculture and its allied subjects.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

Vol. XI புத்தகம் XI	விபவ ஆனி மீ 1உ 1928-ம் ஜூன் மீ 14உ	No. 3 ஜெகி. 3

1 JUN 1928 MADRAS

Late J. SRIRANGA RAJU.

காலஞ் சென்ற ஜெ. ஸ்ரீரங்கராஜு.

ஆரம்பத்தில் முதல் முதலாக சௌமிய ஸ்ரீ "கிருஷிகன்" பத்திரிகை ஆரம்பித்ததற்குக் காரணகர்த்தாவாயும், காகிதக்கிரையம் ஒன்றுக்கு ஐந்து பாகம் அதிகரித்தபோதும் சந்தாவை உயர்த்தக்கூடாதென்று கங்கணம்கட்டி, அதேசந்தாவில் நடத்தும்படி தூண்டியவரும், திருநெல்வேலி, செங்கல்பட்டு ஜில்லாக்களில் டெப்டி கலெக்டராயிருந்தவரும், புதுக்கோட்டை திவான் பேஷ்காராயிருந்தவரும், கிருஷிகன் பத்திரிகையில் எல்லோரும் எளிதில் உணரக்கூடிய விதமாய் சுலபமான நடையில் பிள்ளைகள் மனதில் பதியும்படி பாட்டுகள் எழுதி வந்தவரும், எங்கள் சகோதரருமாகிய ராவ் பஹதூர் ஜே. தர்மரங்கராஜு அவர்கள் ஜேஷ்ட குமாரர் 25 வயதுடைய ஜே. ஸ்ரீரங்கராஜு 1923 ம் ஸ்ரீ மே மீ 27உ வைகுண்டபதவியடைந்த விஷயம் தெரிவிக்க நாங்கள் மிகவும் விசனப்படுகிறோம்.

ஜெ, செல்வரங்க ராஜு

ஜெ. ஆர். ரங்கராஜு

ARTIFICIAL MANURES.

செயற்கை எருக்கள்

தற்காலத்தில் செயற்கை எருக்களைக் குறித்து நமது ராஜதானி யில் பரபரப்பு உண்டாகும்படி எருவியாபாரக் கம்பெனிகளின் சிப் பந்திகளும் சில ஜமீன்தார் வியாபாரிகளும், கமிஷனுக்காக வேலை செய் யும் கூட்டுறவுச் சங்கங்களும் பிரசார வேலை செய்து விற்பனை செய்த தில் ஏராங்கிய மிராஷிகளில் சிலர் பலனடைந்ததாகவும் வேறு சிலர் பலன டையாது நஷ்டப்பட்டதாகவும் சொல்லுகிறார்கள். ஆகையால் இவ்வெ ருக்களைக் குறித்துச் சில விஷயங்களுக்கு முன் சென்னை ராஜ தானியில் கோயம்புத்தூரில் ரசாயன சாஸ்திரியாயிருந்த டப்ளியூ எச் ஹாரிசன் துரையவர்கள் எழுதியிருப்பதை நமது சந்தாதாரர்கள் வா சித்துப் பயனடையுமாறு இங்கு எழுதப்பட்டிருக்கிறது.

மண்ணிலிருந்து செடிகள் தங்கள் ஆகாரத்திற்காக சில தாதுப் பொருள்களை கிரகிக்கின்றன. ஒரு நிலத்தில் தாதுப்பொருள்கள் இருப் பதாலேதான் அதிகமாய் அந்நிலத்திற்கு "வளம்" ஏற்படுகிறது. ஒவ்வொரு நிலத்திலும் இவ்வஸ்துக்கள் அளவுக்கு மிஞ்சியில்லாமல் நிர்ணயமாயிருக்கும். நாம் நிலத்திலிடும் ஒவ்வொரு பயிர்தோறும் அந் நிலத்திலுள்ள தாதுப்பொருள்களை அந்தப் பயிர்களின் இயற்கைக் குத் தக்கவாறு கொஞ்சமாகவோ அதிகமாகவோ குறைத்துக் கொண் டே வருகிறோம். இவ்விதமாக உண்டாகும் குறைவைப் பூர்த்தி செ ய்யச் சரியான ஏற்பாடுகள் செய்யப்படவில்லையானால் அந்நிலத்தில் மீந்திருக்கும் தாதுப் பொருள்களின் அளவு குறைவதால் பயிர்கள சரியாய் வளர்ந்து பலன் கொடுக்கப் போதுமானதா யில்லாமல்போகும்.

தொழு எரு, செயற்கை எரு, பசுந்தாள் எரு, முதலியவைகளை உபயோகப் படுத்துவதால நிலத்திலுள்ள பயிருணவு குறைவு படா மல் காத்து வரலாம்.

தொழு எருவானது நிலத்தின் வளத்திற்கு அவசியமாயுள்ள எல்லாவித பயிருணவுகளையும் தருகிறது.

செயற்கை யெரு வகைகளோ அப்படியில்லாமல் தாதுவஸ்துக் கள் ஒன்று அல்லது இரண்டை மட்டும் கொடுக்கும். ஆகையினால் தான் நிலத்திலுள்ள தாதுப்பொருள்களின் குறைவைப் பூர்த்தி செய் வதற்காக இந்த செயற்கை எருக்களை உபயோகப் படுத்த முயலும் போது அவைகளை வெகு ஜாக்கிரதையுடன் தேர்ந்தெடுக்க வேண் டும். சாம்பல் காரம் அவசியமான ஒரு நிலத்திற்கு பிரகாசித உப்பு உபயோகித்தால் அதனால் நஷ்டமே யுண்டாகும்.

அநேக செயற்கை எருக்கள் மழைத்தண்ணீரிலும் பாய்ச்சல் தண்ணீரிலும் கரைந்து நிலத்திலிருந்து அப்புறப் பட்டுப் போம். மற்றும் சில செயற்கை எருக்கள் நிலத்திலுள்ள அணுக்களிருப்பதினால் நிர்மூலமாய் விடும். ஆகையால் வேண்டிய அளவுக்கு மிஞ்சி இவ்வகை எருக்களை நிலத்திலிடுவதினால் அதிக நஷ்டத்துக்கு இடமுண்டாகும். ஒரு நிலத்தில் போடப்பட்ட செயற்கை எருவில் எவ்வளவு பாகம் அந்தப் பயிரினால் கிரகிக்கப்பட்டதோ அம்மட்டுக்குத்தான் அது உபகாரப்படும். மீந்தது வட்டி முடக்கமடைந்த பணத்தைப்போல, அந் நிலத்தில் அப்பயிருணவைக் கிரகிக்கக்கூடிய அடுத்த பயிரிடும் வரை யாதொரு உபயோகமில்லாமலே கிடக்கவேண்டியதாயிருக்கிறது. ஆகையால் ஒரு நிலத்திற்கு செயற்கை எரு உபயோகிப்பதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவெனில், எந்தப் பயிருக்கு அந்த எருவை உபயோகிக்கிறோமோ, அந்தப்பயிருக்கு மட்டும் அது போதுமானதாக இருக்க வேண்டுமே தவிர அதிக அளவு உபயோகிக்கக் கூடாது என்பதுதான்.

இச்செயற்கை எருக்களின் உபயோகம் நிலத்தின் வளத்தை விருத்தி செய்வதற்கல்ல, ஆனால் அப்போதைக்கப்போது இடும் பயிருக்குத் தக்கப்படி போஷிப்பதற்குத்தான். நன்றாய்த் தெரிந்தெடுத்த ஒரு செயற்கை எருவானது எந்தப்பயிருக்குப் போடப்பட்டதோ அந்தப் பயிருக்குத் திட்டமாயும் அதி சீக்கிரத்திலும் விசேஷ குணத்தைக்காட்ட வேண்டும். ஒருதரம் நிலத்தில் போடப்பட்ட செயற்கை எருவானது எந்தெந்தப் பயிருக்கு விசேஷ குணத்தைத் தருகிறதோ அதற்குத் தக்கபடி "சீக்கிரத்தில் பலனைத்தரும் எரு" என்றும், "நீளாவட்டத்தில் பலனைக் கொடுக்கும் எரு" என்றும் இருவகைகளாகப் பிரிக்கப்படும். எலும்புத்தூளை நிலத்திற்கு எருவாக உபயோகித்தால், அது கொஞ்சமாய்க் கரைந்து அநேக வருஷங்களுக்கு நீடித்துப் பயிர்களுக்கு உணவாகும். ஆனால் சூப்பர் பாஸ்பேட் (Superphosphate) என்னும் எலும்பு பிரகாசிதச் சத்துகளுள்ள ஒரு செயற்கை எருவானது நிலத்திலிடப்பட்ட அந்தப் பயிருக்கு உபயோகமாவதேயன்றி அடுத்த பயிருக்கு உபயோகப்படாது. எலும்புத்தூள் (Bone Meal) ரூபமாகவோ அல்லது சூப்பர் பாஸ்பேட் (Superphosphate) என்னும் எலும்பு சத்து பிரகாசிதச் சத்துகளுள்ள எரு செயற்கை எருரூபமாகவோ நிலத்தில் போடப்பட்ட எருக்களின் உபயோகத்தை சோதித்துக் குணங்களைப் பார்த்தால்

சரியாய்த் தானிருக்கும். ஆனால் சூபர் பாஸ்பேட் (Superphosphate) என்னும் செயற்கை எருவை நிலத்தில் போட்டால் அவ்வருஷமே அதன் சத்து முழுவதும் பயிருக்கு உபயோகப் படுவதினால் போட்ட முதலுக்கு வட்டி உடனே கிடைத்தது போலாகிறது. எலும்புத் தூளின் (Bone Meal) உபயோகம் பயிர்களுக்கு அநேக வருஷங்களில் கொஞ்சம் கொஞ்சமாய் கிடைப்பதால் போட்ட முதலுக்கு வட்டி நஷ்டமென நினைக்கலாம்.

செயற்கை எருக்களை உபயோகப் படுத்தும்போது, உபயோகிக்கும் காலம், முறை இவைகளை தீர்மானிப்பதில் அதிகபுத்தி கூர்மை வேண்டியதாயிருக்கும், ஆனால் அந்த எருக்களின் குணாகுணங்கள் இன்னதென்று தெரிந்துகொண்டு அதற்குத் தக்கபடி அவைகளை உபயோகிக்கலாம். எளிதில் தண்ணீரில் கரைந்து உடனே பயிர்களுக்கு உபயோகப்படும் எருவகைகளை விசேஷ வளர்ச்சியும் செழிப்பும் பயிர்களுக்கு உண்டாக்க வேண்டிய தருணத்தில் உபயோகப் படுத்தவேண்டும். சாதாரணமாக (Nitrate of Soda) நைட்ரேட் ஆப்சோடா வென்னும் உப்பை நிலத்தில் பயிர் உண்டான பிற்பாடே உபயோகிக்க வேண்டும். அப்படி பயிராகுமுன் உபயோகித்தால் அந்த எரு மழையினாலாவது வேறுவிதங்களினாலாவது நிலத்திலிருந்து கழிந்து போம். நவச்சார உப்புக்கலந்த எரு வகைகளும் (Ammonial Fertilizers) அப்படியே நிலத்தில் இந்த எருவை கிரகித்து வைத்துக் கொள்ளும் சக்தி உண்டு. ஆயினும் இந்த நவச்சாரசத்து மண்ணில் பிரவேசித்தவுடன் நைட்ரேட் (Nitrate) என்னும் நவச்சார உப்பாக சீக்கிரத்தில் மாறி நிலத்திலிருந்து தண்ணீரில் கரைந்து அப்புறப்பட்டுப் போகும். மண்ணுக்கு நவச்சாரசத்தை Ammonia) கிரகித்து வைத்துக் கொள்ளும சக்தியிருப்பதால் நன்செய் நிலங்களுக்கு மப்பு மந்தாரமாயுள்ள சமயங்களில் மற்ற நைட்ரேட் உப்பைப்பார்க்கிலும் இதை உபயோகிப்பது சிலாக்கியம்.

பிரகாசிதசத்தும் (Phosphate) சாம்பல் காரசத்தும் (Potash) மண்ணுக்குள் புகுந்து அதிலிருந்து கழிவாகாமல் தங்கியிருக்கும் குணமுடையன. ஆகையால் அவைகளை சௌகரியத்துக்குத் தக்கபடி எப்பொழுதும் உபயோகிக்கலாம். சாதாரணமாக ஒரு நிலத்தை விதைக்கலப்பையினாலோ கைவிதைப்பினாலோ விதைக்கும் சமயத்தில் அவவிதையுடன் சூபர் பாஸ்பேட் பிரகாசித உப்பைக் கலந்துவிடும் வழக்கம் சாதாரணமாய் சில நாடுகளிலுண்டு. எலும்புத்

தூள் (Bone Meal) பேசிக் ஸ்லாக் (Basic slag) போன்ற நாள்பட்டு பலன் கொடுக்கும் எருக்களை நிலத்தில் பயிர் செய்வதற்கு அநேக மாதங்களுக்கு முன் கூட்டிப்போடலாம்.

ஈரத்தையும் எருச்சத்தையும் பாதுகாக்கக் கூடிய இயற்கைகுண மில்லாத மணல் பாங்காயுள்ள நிலங்களில் எளிதில் கரைந்து கழிந்து போகக்கூடிய எரு வகைகளை உபயோகிப்பதைவிட நாளா வட்டத்தில் இளகி பயன்படக்கூடியதாயுள்ள எருவகைகளையே உபயோகிப்பது நலம்; இலை, தழை, சருகு, தொழு எரு, முதலிய இவை போன்றவைகளை உபயோகித்து வருவதினால், அவைகள் மக்கி, ஈரத்தையும் எருசத்தையும் கிரகித்து காப்பாற்றக் கூடிய ஓர்வித கறுப்பு நிறமுள்ள இந்திர வஸ்துவை உண்டாக்குகிறது. செயற்கை எருக்களை உபயோகித்து வருவதில் இந்த கறுப்பு நிறமுள்ள இந்திர வஸ்து (H u m u s) நிலத்தி லுண்டாவதில்லை; இவ்விந்தியாவிலுள்ள அநேக நிலங்களில் மேல் சொன்ன கருப்பு நிறமுள்ள இந்திரிய வஸ்துக்கள் (Humus) இயற்கையிலேயே வெகு குறைவாயிருக்கின்றன. அவைகளில் தொடர்ந்து சிலகாலத்திற்கு செயற்கை எருக்களை உபயோகித்து வருவோமானால், மண்ணில் இயல்பாகவே அற்ப சொற்பமாயிருக்கிற இந்திரிய வஸ்துவும் கூட (Humus) நாளா வட்டத்தில் அதிகக் குறைவடைந்து நிலத்தினியல்பையும் வித்தியாசப்படுத்த ஏதுவாயிருக்கும். இப்படி மண்ணியல்பு மாறுதல் அடைவதால் பின் வருஷா வருஷம் அந்நிலத்திலிடும் பயிர்களுக்கு அதிகக் கெடுதி சம்பவிக்கக் கூடும். ஆகையால் நமது நிலங்களில் தற்காலத்தில் அதிகஅளவாய் கொட்டிவரும் தொழு எரு, புண்ணாக்கு எரு முதலியவைகளுடன் இந்த செயற்கை எருக்களைக்கலந்தும் அல்லது தழை எரு, பசுந்தாளெருக்களுடன் சேர்த்தும் தான் உபயோகிப்பது சிலாக்கியமான முறையாகும் (தனியாக அிந்திரிய வஸ்துக்கடங்கிய செயற்கை எருக்களை உபயோகிப்பதால் திட்டமாய் கெடுதல் சம்பவிக்குமென்பதை கிருஷிகர் எப்போதும் மனதில் வைத்திருப்பது அவசியம்.

பயிரிடும் நிலங்களுக்குத் தகுந்த வகைசெயற்கை எரு இன்னதென்று தெரிந்தெடுத்து உபயோகிப்பது எளிதான காரியமல்ல வென்பதைப் பற்றி மேலே விவரித்தாயிற்று. மேலும் சில பயிர்களுக்கு இவ்விசேஷ செயற்கை எருக்களை உபயோகிப்பதில் அனுகூலமும் மற்றும் சில பயிர்களுக்கு பிரதிகூலமும் உண்டாகின்றது.

Work done by the Agricultural Department during 1926-27

(continued from page 31 of No. 2 of Vol. XI.)

SUGAR CANE.

1926-27ம் வருஷங்களில் விவசாய டிபார்ட்மெண்டார் செய்த வேலையின் சாராம்சம்.

(11ம் வால்யம் 2ம் நம்பர் 31ம் பக்கத் தொடர்ச்சி)

கரும்பு

கோயம்புத்தூரில் ஸ்தாபித்திருக்கும் கரும்பு அபிவிருத்திப் பண்ணையில் செய்து கொண்டிருந்த வேலை ஆதிமுதல் கொண்டு வட இந்தியாவில் பயிரிடும் கரும்புகளை விருத்தி பண்ணுகிறதற்காகவென்றே ஸ்தாபிக்கப்பட்டது. இதற்குப் பணஉதவி இந்தியா கவர்ண்மெண்டாரே கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இவ்விராஜதானியில் பயிராகும் கரும்பு தினுசுகளை அபிவிருத்தி செய்வதின் பொருட்டு தெலுங்கு ஜில்லாக்களில் அனக்காப்பல்லி விவசாயப் பண்ணைக்குச் சமீபமாய் 50 ஏக்கர் நிலம் வாங்கி அதில் இவ்விராஜதானிக் கரும்புகள் அபிவிருத்திக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் இப்போது சட்டடமாய் வேலை ஆரம்பித்திருக்கிறது. இவ்விராஜதானி மண்ணியல்பு, சீதோஷ்ணம் ஜலவசதி முதலியவைகளை அநுசரித்து உண்டாக்கக் கூடிய கரும்பு தினுசுகளை கோயம்புத்தூரிலிருக்கும் கரும்பு நிபுணர் ஆராய்ச்சி செய்து சிலாக்கியமானதென்று சொல்லும் தினுசுகளையும் எந்தமாகங்கள் வைத்தால் இலாபகரமாய் மாகுல கிட்டுமென்பதையும் போலொத்த விஷயங்களை இப்பண்ணையில் ஆராய்ச்சி செய்யப்படும். தற்காலத்தில் அனக்காப்பல்லி, சாமல்கோட்டா, பாலூர், என்று சொல்லப்பட்ட விவசாயப் பண்ணைகளில் அநேக தினுசு கரும்புகள் பயிரிடப்பட்டு வருகின்றன. இவைகளில் ஜாவா 247 ம், மோரீஸ 55ம் நம்பரும் இப்போது சாதாரணமாய் இருஷிகர்களால் ஜாஸ்தியாய்ப் பயிர் செய்யப்படும் பிஜி. பி என்னும் தினுசு கரும்பைவிட ஜாஸ்தி மாகூல்கள் கொடுத்திருக்கின்றன.

வரிசை வரிசையாய் நட்டுப் பயிர் செய்யும் விதத்தையும் வரிசைகளில்லாமல் அங்கங்கே நட்டு பயிர்செய்வதின் தாரதம்யத்தையும் பரீக்ஷித்துப் பார்த்ததில் சாதாரணமாய் ஊர் வளக்கத்தில் இடும் விதத்தைவிட வரிசைவரிசையாய் நட்ட பயிர்களிலிருந்து நூற்றுக்கு பத்தரை பங்கு ஜாஸ்தி மாகூல் கிடைத்திருக்கிறது. இந்த ஆராய்ச்சியால் திட்டமான அனுகூலங்கள் சில வருஷங்களாகக் கிடைத்திருப்பதால்

இதை விவசாயிகள் கையாடும்படி தக்க ஏற்பாடுகள் சீக்கிரம் செய்யப் படும்.

எவ்வளவு தூரத்திற்கு கரும்பு வரிசைகளிருக்க வேண்டுமென்றும், ஒரு கணுவுக்கும் மற்றொரு கணுவுக்கும் எவ்வளவு தூரம் இருக்க வேண்டுமென்றும் செய்த ஆராய்ச்சிகளிலிருந்து நன்றாய்க் கிளைத்துப் பயிராகக் கூடிய ஜாவா (24) ஒத்த தினுசுகளை நெருக்கமாய் நடாமல் ஜாஸ்தியிடம் விட்டு நடுவதினால் கரும்பு பயிர்செய்வதில் பிடிக்கும் செலவுகள் கம்மியாகிறதென்று தெரியவருகிறது.

எரு விஷயமாய்ச் செய்த பரீக்ஷைகளில் இயற்கை வசதிகளுள்ள நிலங்களில் மாத்திரம் கரும்பு பயிர் செய்வதில் லாபம் கிடைக்குமேயொழிய மற்றப்படி இயற்கை வசதிகள் அமையாத நிலங்களில் எவ்வளவு எருவிட்டாலும் தக்க பலன் கிடைக்கிறதில்லையென்றும் தெரியவருகிறது.

பாலூர் விவசாயப் பண்ணையில் அநேக தினுசு புண்ணாக்குகளையும், புண்ணாக்குகளுடன் சல்பேட் ஆப் அம்மோனியா வைப்போல [illegible]த்த ஜலசத்தைக் கொடுக்கக் கூடிய எருக்களையும் கலந்து உபயோகித்தும் பரீட்சைசெய்து பார்த்ததில் முத்துக் கொட்டை புண்ணாக்கும் நிலக்கடலைப் புண்ணாக்கும் சமானமாய் ஒரே மாதிரி நல்ல பலன் கொடுத்திருக்கிறது. ஆனால் மணிலாக் கொட்டைப் புண்ணாக்கு எருவாய் உபயோகித்ததில் சற்று செலவு கம்மியாயிருக்கிறதென்று தெரிகிறது. மீன் குவானோ போட்டுப் பார்த்ததில் அவ்வெரு ஜாஸ்தி விலையாயிருப்பதால் தக்க லாபம் கொடுக்கவில்லை.

கரும்புப் பயிர் செய்வதில் பிடிக்கும் செலவைக் குறைக்க என்ன செய்தால் அனுகூலமாகுமென்று ஆராய்ச்சிகள் செய்ததில் பிப்ரவரி மாதத்தில் கரும்பு புர்களை ஒருசிறு இடத்தில் நட்டு ஆகஸ்ட்டு மாதம்வரையும் அதை வளரவைத்து அப்பால் அப்பயிரைக் கணுக்களாக வெட்டி வேறு இடத்தில் நடுவதினால் ஜாஸ்திவிஸ்தீரணத்தில் நட கரும்பு கிடைப்பதுடன் கணுக்களும் பழுது போகாமல் முளைக்க இடமிருக்கிறது. இத்துடன் கரும்புப்பயிர் செய்யக் கூடிய இடங்களில் ஆகஸ்டு மாதத்திற்கு முன் ஒரு குறுகிய நெல்பயிரும் அறுவடை செய்து கொள்ளக் கூடுமென்றும் தெரிய வருகிறது.

தென்னை

முன் வருஷத்தில் சொல்லிய பிரகாரம் நல்ல விதைகளைத் தெரிந் தெடுப்பதும், இருஜாதிகளைப் பிணைத்து அதிலிருந்து நல்ல ஜாதிகளைத்

தெரிந்து எடுக்கக் கூடிய வழிகளை விவரித்திருந்த பிரகாரம் வேலைகள் செய்து நெத்துகள் பொறுக்கி யெடுத்து அவைகளிலிருந்து நாத்துகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளினுடைய பலன் தெரிய இன்னும் குறைந்தது 7 வருஷத்திற்கேனுமே செல்லும். தென்னைகளுக்கு எருவிடுதல், எவ்வளவு தூரத்தில் நடவேண்டு மென்றும் எத்தனை வருஷத்து மரத்திலிருந்து விதைப்பொறுக்க வேண்டுமென்ற விஷயத்தைக் குறித்த ஆராய்ச்சிகள் நடந்தேறி வருகின்றன! ஆனால் இதுவரைகிடைத்திருக்கும் அநுபோகங்களிலிருந்து முடிவான தீர்மானம் சொல்ல இன்னும் சில வருஷங்கள் செல்ல வேண்டும்.

வாழை

சாமல் கோட்டா விவசாயப் பண்ணையில் அநேக தினுசு வாழைகள் பயிரிடப்பட்டு வருகின்றன. அதில் 3 தினுசுகள் அதாவது சக்கரகேளி, மோரீஸ், பொந்தன் தினுசுகளிலிருந்து ஏக்கர் ஒன்றுக்கு 664 ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. இன்னும் இப்பயிரில் ஆராய்ச்சிகள் செய்து கொண்டு வருகிறார்கள். அதிக எருவிடுவதினாலாவது அல்லது வேறு விதங்களிலாவது ஒரு தினுசை ஜல்தியாய்க் காய்க்கச் செய்யக்கூடுமாவென்று பரீட்சித்து வருகிறார்கள்.

கால்நடைத் தீவனப்பயிர்

தற்காலத்தில் விருஷிகர், புகையிலை, பருத்தி, மணிலாக் கொட்டை, கரும்பு முதலிய பயிர்களிலிருந்து தக்க லாபம் அடைகிறதினால் மாட்டுத் தீவனத்திற்கென்று கால் நடைத் தீவனப் பயிர்களைப் பயிர் செய்வதேகிடையாது. இக்குறைவால்தான் மாடுகள் சரிவர வளர்வதில்லையென்றும் எவ்விதசிர்திருத்தங்கள் செய்தால் இக்குறைத்தீருமென்றும் விவசாய டிபார்ட்மெண்டார் யோசித்ததில், மழைகாலங்களில் கலப்பாய் விதைத்து அறுக்கக் கூடிய சோளம் முதலாகிய பயிர்களையும், அக்காலத்தில் ஏராளமாய்க் கிடைக்கக் கூடிய புல் தினுசுகளையும் அருத்து அவைகளை குளிகளில் போட்டு சில நாள் பழுவேத்தி மூடி வைத்து கோடைகாலத்தில் தீவனத் தட்டுப்பாடாயிருக்கும் போது அக்குளிகளைத்திறந்து அதில் போட்டிருக்கும் புல்லையும்சோள நாத்து முதலியவைகளையும் எடுத்து மாடுகளுக்கு உபயோகித்து வந்தால் உபகாரமாயிருக்குமென்று எண்ணி இவ்விராஜதானியிலுள்ள ஹோசூர் முதலிய இடங்களிலுள்ள கால் நடைப் பண்ணைகளில் மழைகாலத்தில் மேற் சொன்ன பயிர்களை வளர்த்து 383 டன் (1 டன் 2 வண்டிபாரம்) பச்சைச் சோளங்களைக் குளியில் போட்டு கோடை கால

த்தில் எடுத்துத் தீவனமாய் உபயோகித்ததில், கால் நடைகள் நன்று ய்ச் சாப்பிட்டதாகத் தெரியவருகிறது. இப்படிச் செய்வதில் 100 ராத்தல்சோளம் குளியில் போட்டால் எடுக்கும்போது 81 ராத்தல் இருப்பதாகத் தெரியவருகிறது. மழைகாலத்திலும் குளிர்காலத்திலு எங்கும் ஜாஸ்தியாய் முளைக்கும் புல்லுகளை முளைக்கும் தருணத்தில் அறுத்து இம்மாதிரி குளிகளில் போட்டு வைத்துக் கொண்டால் கோடைகாலத்தில், பச்சைப்புல் முதலான தீவனங்கள் அகப்படாமலிருக்கும் போது அக்குளிகளிலிருந்து புல் எடுத்துத் தீவன மாக்கிக் கொள்ளலா மென்ற விஷயம் எல்லாக் கிருஷிகரும கையாட வேண்டு மென்றே இவ்வாராய்ச்சிகள் செய்திருக்கிறார்கள்.

Indian Sugar Bureau

இந்திய சர்க்கரை பீரோ

இந்திய சற்கரை பீரோவின் காரியதரிசி 1927-ம் ஹூ வரவிடுத்த அறிக்கைப் பத்திரம்.

முந்திய வருஷங்களைப்போல் இவ்வருஷத்திலும் கரும்புச்சாகுபடி, கரும்பு சரக்குசெய்தல், இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் நடக்கும் சற்கரைவ்யாபாரம், முதலியவைகளை கவனித்துவரப்பட்டது. சண்டை முடிவானதிலிருந்து சற்கரையின் விலை, நாளுககு நாள் குறைவடைந்து வந்ததால் பம்பாய் ராஜதானியலும், தக்கணத்திலும் இதர பிராந்தியங்களிலுமுள்ள கிருஷிகரின் நிலைமையை எவ்வாறு சீர்திருத்துவதென்றும், கரும்புப் பயிர் க்ஷீணிதமடையாமலிருப்பதற்கு ஏற்றவழிகளையும் தெரிவிக்கும்படி கவர்ன்மென்டார் கேட்டு வருகிறார்கள்.

இவ்விஷயத்தில் இந்திய சற்கரை பீரோ ஆலோசனை செய்து விலைகுறைவைத் தடுப்பது சாத்யமில்லாமலிருப்பதால் கரும்பு சாகுபடி செலவைக் குறைப்பதற்கேற்ற சாதனங்கள் எவையென தீர்காலோசித்துப் பார்த்து வருஷா வருஷம் புதுப்பயிரிடுவதைவிட கரும்புவெட்டிய பயிரையே அங்கு விழுந்துகிடக்கும செத்தை முதலியவைகளை மேலேயேபோட்டு நெருப்புவைத்துவிட்டு, தணலீர பாச்சி கணவெட்டி, எருவிட்டுப் பயிர் செய்தால் செலவு அதிகமாகக குறையுமென்றும், சாதாரணவழியில் பயிரிடுவதால் கிடைக்கும சற்கரையளவு மறுதாம்புப்பயிரில் கிடைக்காவிட்டாலும், முதல்ல நட்டுப் பயிரிடும் செலவையும் அதிலிருந்து அகப்படும லாபத்தையும், மறுதாம்புக்கரும்புப் பயிரிடும் செலவையும், அதிலிருந்து கிடைக்கும லாபத்தை

வும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மறுதாம்புக் கரும்பு மாருலே இலாபகரமாயிருப்பதாகவும் ஆகையால் அதுவே கையாளுவது சிலாக்யமென்றும் அபிப்பிராயப்பட்டு அவ்வாறு செய்வது நலமெனத் தெரிவிக்கிறார்கள்.

1925-1926-ம் வருஷத்தில் இந்தியாவிலுள்ள வெள்ளை சர்க்கரைச் சாலைகளில் உற்பத்தியான சர்க்கரைக் கணக்கைப்பார்த்ததில் கரும்பிலிருந்து பாகுசெய்யாமல் நேராக வெள்ளை சர்க்கரை செய்த இடை 51867 டன் வெள்ளை சர்க்கரை (சீனிசர்க்கரை) யென்றும், அதற்கு முந்திய வருஷத்தில் 33805 டன் தானென்றும் தெரியவந்தது.

மேலும் 1924-1625-ம் வருஷத்தில் பாகிலிருந்து வெள்ளைச் சர்க்கரை (சீனிசர்க்கரை) 33593 டன்கள் செய்திருக்க 1925-1926ல் மேல் கண்டவிதமாய் 38407 டன வெள்ளை சர்க்கரை செய்ததாகத் தெரியவருகிறது. ஆகவே நேராகக் கரும்பிலிருந்து வெள்ளை சர்க்கரை செய்ததில் 18092 டன் வெள்ளை சர்க்கரையும், பாகிலிருந்து செய்ததில் 4814 டன் வெள்ளை சர்க்கரையும் அதிகமாகச் செய்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதனால் நமது நாட்டுக் கரும்புப் பயிர் அபிவிருத்தியடைவதாகத் தெரிய நாம் சந்தோஷப்படவேண்டியதே.

1924-1925-ம் வருஷத்தில் கரும்பிலிருந்து நேராக வெள்ளை சர்க்கரை எடுத்த அளவும், பாகிலிருந்து வெள்ளை சர்க்கரை செய்த அளவும் அநேகமாய் ஒன்றாயிருக்க 1925-1926-ம் வருஷத்தில் கரும்பிலிருந்து நேராக வெள்ளை சர்க்கரை செய்ததில் 18062 டன் அதிகமாயிருக்க பாகிலிருந்து வெள்ளை சர்க்கரை செய்த அளவு 4814 டன் தான் அதிகமாயிருக்கிறது. அதாவது அநேகமாய் நாலரையில் ஒரு பாக மென்றே சொல்லவேண்டியிருக்கிறது. இதற்குக் காரணமென்னவென்றும் அவ்வாறு பாகிலிருந்து வெள்ளை சர்க்கரை செய்வது குறைவது இந்நாட்டின நலத்திற்கா மென்றும் ஆராய்வோம். 100 மணங்கு கரும்பிலிருந்து நேராக வெள்ளை சர்க்கரை செய்தால் குறைந்தது 10 மணங்கு வெள்ளை சர்க்கரையாவது அகப்படும். அதாவது கரும்பின் எடையில 10-ல் 1 பாகம் கரும்பிலிருந்து பாகுகாய்ச்சி, பாகிலிருந்து வெள்ளை சர்க்கரை செய்தால் 100 மணங்கு கரும்புக்கு நாலரை மணங்கு வெள்ளை சர்க்கரைதான் கிடைக்கும். அதாவது முந்திய முறைககுப் பாதிக்கும் குறைவாயிருககிறது. ஆகையால் கரும்பிலிருந்து பாகு செய்தபின் பாகிலிருந்து வெள்ளை சர்க்கரை

செய்வதைவிட, நேராகக் கரும்பிலிருந்து வெள்ளை சர்க்கரை செய்வதே இலாபகரமான முறையாகும்.

வெள்ளை சர்க்கரையின் விலை ஏறுவதும் குறைவதும் ஒரு நாட்டைப் பொறுத்ததல்ல. ஏனென்றால் வெள்ளை சர்க்கரையானது உலகத்திலுள்ள பலதேசங்களின் விளைவையும், அத்தேசத்தார் செலவிடும் சர்க்கரையையும் பொறுத்ததாயிருக்கிறது.

நாம் இந்த இராஜதானியிலுள்ள சில கரும்புப்பயிரிடும் விருஷிகருடைய நிலங்களைப் பார்க்கப்போனபோது அவர்கள் மனதில் இந்திய சர்க்கரை அபிவிருத்தியைக் கெடுப்பதற்காக அயல் நாட்டார் சில வருஷங்களுக்கு விலையைக்குறைத்து விற்று இந்திய கிருஷிகளை நஷ்டப்படும்படி செய்துவிட்டால் பின் கரும்புப்பயிர் அபிவிருத்தி இந்தியாவில் நின்று விடுமென்றும் அப்பால் அவர்கள் இஷ்டப்படி விலைகளைத் தூக்கிவிற்று இலாபமடைபவரென்றும் எண்ணத்துடன் செய்கிறார்களோ என்ற சந்தேகம் குடிகொண்டிருப்பதாகத் தெரிந்து அவ்வாறு சந்தேகப் படக்கூடாதென்றும், ஏனெனில் வெள்ளை சர்க்கரையானது பல வேறு நோக்கங்களுடைய பல ஜாதியாரால் பயிரிடப் படுவதால் எல்லாதேசத்தாரும் சேர்ந்து இந்திய கரும்பு அபிவிருத்தியைக் கெடுக்கப் பிரயத்தனப் படமாட்டார்களென்று சமாதானம் சொல்லிவந்தோம். திருஷ்டாந்தமாக அமெரிக்காவில் பருத்தி வேண்டிய அளவுக்கு அதிகமாய்ப் பயிரிடப்பட்டபடியால் பருத்திவிலையில்லாமல் நின்றுபோகப் பருத்திப் பயிரிடுவோர் எல்லோரும் ஒன்று சேர்ந்துபேசித் தீர்மானித்து பருத்தி சாகுபடியை ஒவ்வொருவரும் குறைத்துக் கொள்வதெனத் தீர்மானித்து அவ்வாறு இவ்வருஷம் செய்திருக்கிறார்கள். இந்தியாவிற்கு வேண்டிய அளவு சர்க்கரையின் பாதிபாகம் கூட இன்னும் இந்தியாவில் உற்பத்திசெய்யப்படவில்லை. இந்திய விவசாயிகள் போதிய முயற்சி எடுத்து கரும்புப்பயிர் அபிவிர்த்திசெய்து இந்தியாவிற்கு வேண்டிய சர்க்கரை விளைவித்தால் சட்டசபைகளின் மூலமாய் சர்க்கரைக்கு இறக்குமதித்தீர்வை விதித்து அயல் நாட்டுசர்க்கரை இந்திய சர்க்கரையுடன் போட்டி போடாமல் செய்யக் கூடுமென்பது எமது அபிப்பிராயம். ஆகையால் தற்கால விலை குறைவுகளைப் பற்றி அதைரியப்படாமல் செலவுகளைக் கூடியவரையில் குறைத்து இந்தியாவுக்கு வேண்டிய அளவு சர்க்கரை இந்தியாவிலேயே உற்பத்தியாகும்படி செய்யவேண்டியது ஒவ்வொரு இந்திய கிருஷிகனுடைய கடமையாகும்.

Replies to Queries

கடிதவினாவுக்கு விடைகள்

1. தென்னங் குரும்பை உதிர்வதேன்? கிருஷிகன் 10ம் வாலம் 222-ம் பக்கம் தென்னை பிஞ்சு குரும்பை உதிர்வதை நிலைப்பிக்கு முறை தெரிய விரும்பி மிஸ்டர். எ. யஸ். சுப்பய்யர் வினவுகிறார்.

இது வரையில் விவசாய விவாசாவுக்கு தெரிவித்து அவர் பெற்ற பரிகாரம் தெரிவிக்கவில்லை. பரிகார மறிந்திருந்தால் மற்ற விவசாயிகளும் தெரிந்து பயனடைய வேண்டியது நியாயம் என்பதை நண்பர் கவனிக்கவுமில்லை. பரிகாரம் கிருஷிகனில் அறிவிக்காததால் தெரிந்ததை இனியேனும் அறிவிக்குமாறு வேண்டுகிறேன்.

“ உடையரெனப் படுவதூக்கமஃதில்லா
ருடைய துடையரோ மற்று”

(பொழிப்புரை) ஒருவரை பொருளுடைய ரென்பதும் மனவூக்கம். அஃதில்லார்
பொருளுடையவராயினும் காப்பாற்ற வியலாது.

“ உள்ளமுடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கிவிடும்-”

(பொழிப்புரை) ஒருவருக்கு மனவெழுச்சியே நிலைமையான உடைமை
அஃதில்லாதார் பொருளுடையவராயினும் அவை நிலைக்காது

என்ற பொய்யா மொழியார் திருவாக்கை நேயர் சிந்தித்தொழுகாதது பரிதாபம்.

தென்னம் பிஞ்சு உண்டாவது * வேற்று மா மகரந்தத்தா லுண்டாவதால் மரத்தினியல்பான சுபாவமன்று. குரும்பை உதிர்வது விளைவுக்கு † வேண்டிய சக்தி மரத்துக்கு சேராததால் பிஞ்சு உதிர்வதாயிருக்க வேண்டும். அதன் காரணம் பின்வருமாறு:—

1 விளைவில்லாத காயிலேனும், விளைவில்லாத இளமரத்திலேனும், கண் முளைக்கச் செய்து உண்டான தென்னைக் குரும்பை உதிரலாம். விலைக்குக் கண் விற்போர் விளையாத காயையும் பாவுவர்:

---

* அக்க மர மகரந்தத்தாலு முண்டாகலாம். வேறு மரத்துமகரந்தம் விழுந்தும் உண்டாகலாம்- ஒரே தென்னை மரம் இருக்கும் இடத்தில் அம்மரம் காய்ப்பதே இதற்கு போதிய அத்தாக்ஷியாம். ப: ர:

† பருத்திப் பயிருக்கு வேண்டிய உணவுப் பொருள்களெல்லாம் நிலத்திலிருக்கும்போது பூவும், பிஞ்சுகளும் கொட்டுண்டு போவதை நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து, பார்த்துப்பூமியின் நிலைமையும், அதிலுள்ள சிற்றுயிர் அணுக்கிருமிகளும், இன்னும் பல காரணங்களால் சம்பவிப்பதாக அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் இதைப்பற்றி முடிவான அபிப்பிராயத்திற்கு வரவில்லை. அவ்வித காரணங்கள் தென்னையிலு மிருக்கலாம்: ப. ர:

2- வேனல் காலம், மரம் வாட்டங் கொடுத்து, பின் மழை பெய்து விட்டாலும், வாட்டந் தீர்வதற்குள்ளும், குரும்பை உதிரலாம், நிலத்தை அடிக்கடி கிளறிவிடின் மரம் வாட்டங் கொடாது.

3- நிலம் வெட்டி கொத்தா தாழ்வால் பூமியில் காற்றுலாவி உணவு சேகரிக்க முடியாமல் பிஞ்சு உதிரலாம்.

4 தென்னோலை பசுமை குறைந்து வெளிறியிருக்குமானால் பொட்டாஷ் சத்து இல்லாத குறைவால் பிஞ்சு உதிரலாம், அப்படியிருந்தால் இலையில் *புள்ளி காணப்படும்:

5 பாஸ்பரஸ் சத்து குறைவின் வித்து திரட்சி யடையக் கூடாமல் பிஞ்சு உதிரலாம்,

6 மரம் செழிப்பென்று கூறுவதால் நைட்ரஜன் சத்து தாழ்வாயிராது: தென்னோலை நன்றாய்ப் பசுமை குடித்திருக்கிறதா? இருண்ட பசுமையா?

நைட்ரஜன் சத்ததிகமான உரத்தால் நெல் பயிர் தாழ் ஓங்கி வளர்ந்து தானியமணி பதருகும்: அது போன்று தென்னை போஷிப்புக்கதிகமான நைட்ரஜன் சத்துள்ள பூசாரம் மரம் கிரகித்து குரும்பை உதிரலாம்: சிருஷ்டியில், தாவரமோ பிராணிகளோ அளவுக்கு அதிகப்படாமல் போஷிக்கப்பட்டால் வாழ்க்கை மேம்பாடாக விருக்கும்: கூலி வேலை செய்யும் ஸ்திரீகளுக்கு சந்ததி பெருகவும் செல்வமுள்ள ஸ்திரீகளுக்கு உழைப்பில்லாததால் சந்ததி யரிதாயிருப்பதும் காணலாம்: மதர்த்து வளர்ந்து படர்ந்த மாமர முதலியது வேர் வெட்டு 1 வருடம் 1 வருடங்கிளை கவாத் செய்வது இலை மோதுவது குன்றி நல்ல காய்ப்புக்கு வரும்: கொழுத்த மலட்டுப் பசு உழவு செய்வதால் மெலிந்து கெர்ப்பம் நிலைக்கும்: அவ்வாறு தென்னை மசாளிப்பு தீர்ந்து காய்க்குமாறு † மரம் 1க்கு நீற்றிய சுண்ணாம்பு தான் 5 பவுனும்; 4 பவுன் சாப்பிடும் உப்பும், 7 முதல் 10 பவுன் எலும்புத் தூளும் போடவும். நன்றாய்க் காய்ப்புக்கு வரும். பிஞ்சு உதிர்வது நின்று விடும்: மறுவருடம் முதல் வழக்க உரத்துக்கு பாதி அளவுதான் போடலாம்: 3 மரம் வீதஞ் சோதனைக் கெடுத்து முதல் மரத்துக்கு மேல்கூறியபடி உரமும், மறு 3 மரத்துக்கு எலும்புத்தூள் தவிர பாக்கி உரமும் பிறிதோர் 3 மரத்துக்கு எலும்புத்தூள் உப்பு நீக்கி, சுண்ணாம்பு மட்டும் போட்டு,பரீட்சிக்கவே இன்ன உரம் தேவை என்ற காரணந்தெரியவரும்: தேர்ந்தமுறை யனுசரிக்க உதவும்: தென்னையை சுற்றி 6 அடி தூரம் அரை, முக்கால் அடி ஆழம்

* சிலநோய் கொடிகளாலும் புள்ளிகள் உண்டாகிறதும் உண்டு. ப. ர.

† கிருப நேயர் கீழே சொல்லும் விஷயங்கள் எவராலாவது பரீட்சிக்கப்பட்டுத் தெரிந்த விஷயமாயென்றும், அல்லது கிருபநேயர் செய்து அநுபவித்த முறையா யென்றும், அல்லது யுக்தியின் பேரில் இனிப்பரீட்சித்தறியும்படி சொல்வதா யென்றும் தெரிவித்தால் நலம்: ப. ர.

மண்ணெடுத்து வெளியே குவித்து, பிரஸ்தாபித்த உரங்களை எல்லாம் புக்கரும் பரவலாய்ச் சிதறி வெளியே குவித்த மண்ணால் மூடி ஜலம் வார்க்க வேண்டியது. செழிப்பான காய்ப்புக்கு வந்து விடும்:

7. பூமி நின் மண்ணில் எவ்விதமான சாரமாவதிருக்கிறதா? சாரம் நிறமென்ன? கடின சாரமா? இலக்கமான சாரமா?

8 மண் வயணமெப்படி? மணல்கால் புலபுலத்த நிலமா? களிமண் பாங்கா! இதன் பக்க நிலம் செழுஞ்சி அவரி டையின்சா செழிப்பா யுண்டாகின்றனவா?

9 தென்னை தலை உச்சி மட்டை 4 பக்கங் கவிந்து மடிந்திருந்தவரை தாய் மரமெத்து சேர்ந்ததாயிருந்து. லேசான காய்ப்பு மரமெத்தாயிருக்கலாம்.

10 கை காயிலும்பத்தியான கன் மரமானால் ரொம்பநாள் சென்று சொற்பமாய்க் காய்க்கும், காய்ப்பேறபடும்வரை பிஞ்சு உதிரலாம்? மரம் நெருக்கமா?

11 நிலம் வடிகால் வசதி யுள்ளதா?

பின்னும் வேண்டுங் காரணங்களை யோசித்தெழுதினால் கூடிய சமாதானங் கூறலாம்

ஆலக்கோடி களை யழிவுமுறை

கிருஷிகன் 10 ம் வாலம் 225_226 ம் பக்கம் ஆலக் கொடிகளையால் நெல் பயிர் கெடுவதை மாற்றும் பரிகாரம் விரும்பி மிஸ்டர் நெல்லையப்ப முதலியார் வினவி புள்ளார்.

இதை நிவர்த்திக்கு முறையிருந்து இருந்தபதாக கிருஷிகனில் அறிவிக்காததால் கஷ்டம் நீங்கவில்லை எனக்கருதி, பரிகாரம் தெரிவிக்க முன் வந்தோம்.

ஆலக் கொடி களையானது, புல் வர்க்கமா? இலைகளையா? வென விவரித்திருந்தால் திட்டமாய் முறை கூறலாம். நண்பர் பிரஸ்தாபிக்கும் நிலமையில் திருநெல்வேலி ஜில்லாவிலிருக்கிற வளவிபுல் வர்க்கமென நினைத்து பரிகாரம் தெரிவிக்கிறோம். மேலும் நிருப நேயர் கூறுங் களை யெதுவாயினும் அழிந்தேபோம். வளவி புல் பாசான ஜலத்துடன் வந்து நிலத்தில் சேர்ந்து பரவிவிடுகிறது: நிலத்தில் பாசான ஜல வாமடை முகப்பில் 7-8 சிறு கம்புகள் நட்டு விடில் வளவிபுல் இரண்டு சேரும். வளவி புல் சேரச் சேர, வெளியாக்கி விடலாம். "ஆதியில் நகத்தால் கிள்ளி யெறியும் புளியங்கன்று பின்பு கோடாலியால் வெட்டுவதற் கொப்பாம்" ஆரம்பம் சொற்ப அசாக்கியமாயிருப்பது பின்னால் பெலமான தொந்தரவாய் விடுகிறது.

வளவிப் புல், மூங்கில் இலைபோல் வடிவமும், இலை ஒன்றேனால் முதல் 2 இஞ்சவரை நீளமும் கால் அங்குலமுதல் ½ அங்குலம் அகலமாயிருக்கும்

காம்பு இளைகள் வெஷ்டிதையலூசியமூவு கனமிருக்கும். புல் கணுக்கள் 1 இஞ்சுக்கு மேலிருது. 1 புல் மூடு 5, 6 கஜம் தூரம்வரைபடரும். புல் கணு, தெரித்து விழுந்தாலும், நிலம் பூரா சொற்ப நாளில் படர்ந்து விடும். பயிருண்டானது கஷ்டமாக முடியும். புஞ்செய்களையாகில் திராவகத்தால் அழிக்கலாம். நஞ்செய் களை நிலத்தில் ஜலம் விட்டு 2 தபா உழவு செய்து ஜலமின்றி வடிய வைத்து கச மரத்தால் மரமடித்து 2 நாள் உலரவிடவும், பின் 3ம் நாள் முன்போல் 1 உழவு செய்து ஜலம் வடியவைத்து மரமடித்து 1-2 நாள் உலர விடவேண்டும், இவ்வாறு 2-3 தபா உழவாசி மரமடிக்கவே, களைப்புல் மண்ணுடன் புதைந்து அழிந்தேபோம். ஜலம்வடியமுடியாத நிலம் என்றறிவித்தால் வேறு பரிகாரம்கூறலாம்.

அணிலால் மாதளங்கா யழியாமுறை

இருஷிகன் 10 ம் வாலம் 235 பக்கம் மாதளங்காய் அணில் கடியாமலும், அணிலழியாமலும், செய்யும் பரிகாரம் விரும்பி, மிஸ்டர் ஜமால் செய்யது முகம்மது சாய்பு வினவுகிறார். நாம் சிரேஷ்டமான பழம் சாப்பிடும் ஸ்தலம் மகமதியர் வாழும் பக்கமே யமைகிறது. மகமதியருக்குப் பழப்பிரியம் ஜாஸ்தி. பழவிருத்தி செய்யும மகமதிய கனவான்களுக்கு வந்தனம் புரிவோம்.

பனையின் பன்னாடை (சில்லாட்டை) கருப்பு நாருள்ளதான முற்றியது கொண்டு வந்து உரித்த தேங்காயழவு தோன்றும்படி பெரப்பியாக மாதளம் பிஞ்சைப் பொதிந்து, பனை நாரால் கட்டவேண்டும், பன்னாடை பிஞ்சளவு பொதிந்தால் காய் முற்ற முற்ற பொதியவி லடங்காமல், வெம்பி உதிரும். பன்னாடை அருவாளால் அருக்கமுடியாதிருப்பதால், அணிலால் காயை யழிக்க முடியாது, செலவும் குறை; சுலபமாயும் செய்யலாம். அநேகர் வேசில் கேட்டதாலும தெரிவிக்க நேர்ந்தது.

இலுமிச்சம் பதிகங்கண் கிடைக்கும் ஸ்தலம்

இருஷிகன் 11ம் வாலம் 17 ம் பக்கம் மிஸ்டர் எம் ராமநாத் இலுமிச்சம்பதிக நாத்து பாவத்தேவை என்னுர். பழவிதை யெடுத்து நாத்துப்பாவி, கன்றுநடுவது 4 வருடம் சென்று காய்க்கும். பதிகம் போட்டகன்று நடுவதானால், 2 ம் வருடமுதலே காய்க்கத் தடக்கும். நன்றாய்ப் படர்ந்து காய்ப்பு ஜாஸ்தியாகும். இலுமிச்சங்கன்று, சொற்பமாய் தேவையாயிருந்தால் இலுமிச்சந் தோட்டங்களில் செடிகள் மதாளித்து வளர்ந்து கிளை மோதிபடர்ந்து இருந்தால் அவைகளை கவாத்து செய்ய வேண்டியதாகவிருக்கும். இந்தசெடி 6 மாத முதல் காய்க்கும், ஜாஸ்திகன்று தேவையாகில் பதிக்கன்றுகளை வாங்க நடவேண்டும்.

தஞ்சாவூர் ஜில்லா ரெயில்வே லயினில், குருஜேரி, பண்டாரவாடை, அய்யம் பேட்டை, வழுத்தூர் என்ற கிராமங்களில், மகமதியர் ஜனக்கம் [illegible]

ஸ்தி. பருவகாலந் தவருமல், சாருபடிசெய்து முன் கூட்டி நெல்லறுவடை செய்து லாபமாய் விற்கிறார்கள். செலவு செய்கிறார்கள். அய்யம்பேட் டை ரத்ன ஐமுன்காரனம் நேர்த்தி, இலுமிச்சை பயிர் செய்து, ஏக்கருக்கு 3000.* ரூபாய் மாருலடைகிறார்கள். கொடிக்கால் பயிர் செய்வர் வேலையில் லாதபோது செவகல் மால் வைத்து லாபம் பெறுகிறார்கள், மகமதியர் பண்டிகை, உற்சவம், நன்மை தீமை செலவு செய்தும் வருடம் தவருமல், நிலம் வாங்குகிறார்கள். இந்த மாதிரி, தஞ்சை ஜில்லா விவசாயம் ஊக்கர்தன மூது செய்யின், ஐக்கிய மத்தியத்தால் வாழும் டென்மார்க் தேசத்திலும் மேலான செல்வம் பெருகி விடுமே. மகமதியர் இலுமிச்ச நாத்து பதிகம் போட்டு விற்கிறார்கள்.

3-4 வருடம் சென்ற இலுமிச்சம் பதிக்கண் உண்டு. மூங்கில் முதலிய பலதினுசு நாத்து வளர்த்து விற்பது முண்டு. தஞ்சை ஜில்லா நீடா மங்கலம், ஐக்கிய எரு சங்க காரியதரிசி தேசாபிமான சிகாமணி, மிஸ்டர் சு, சேதுரு மய்யரவர்கள் மூலம் கண் தருவிப்பது மேன்மை. கண்மோசமாகிறது. அல்லது தக்க ஆளனுப்பி பதிகக் கண் வாங்கவேண்டியது. விலைப் போகாத வெம்பல் இலுமிச்சம்பழம், எத்து பாவுவதுண்டு. நன்றாய் விசாரித்து சரியான மனிதர்களிடம் பதிகக்கண் வாங்குவது நலம்.

ஈருள்ளி விதை

ஈருள்ளி விதை தயாரிக்கும் முறை கிருஷிகன் 10ம் வாலம் 229 ம் பக்கத்திலும், கிருஷிகன் 11 ம் வாலம் 19 ம பக்கத்திலும், ஈருள்ளி விதைநல்ல தின்சமையவில்லை என, சந்தா நேயர்கள் வினவுகிறார்கள். விதை நாம் தயார் செய்து கொள்வது நலம் வியாபாரிகளை நம்புவது திருப்தியாயமையாது- நீலிசாக்கில் நுண்ணிய மணல் கலந்து, வியாபாரம் செய்யவே, ஆங்கிலேயர் கண்டுபிடித்து மாயநீலம செய்து இந்திய நீலி வியாபாரம் ஒழிந்தது. பருத்திப் பஞ்சு பனியில் போட்டு, இடையை யதிகரிக்கச் செய்து பஞ்சு கெட்டு பருத்தி சவ்சாய் விலையாவதில்லை. இது போன்ற இந்திய வியாபார மோசம் எழுதி முடியாது. ஆங்கிலேய கம்பெனிவிலை ஜாஸ்தி கூறுவர். சரக்கு மோசமிராது. அதனால் ஆங்கில சரக்கு விலையாகிறது. இந்தியா வியாபார மோசம் நீங்கியாவரும் வாழும்படி ஐக்கிய மத்தியம் பெருகும்வரை, இந்தியா விருத்தியாக நாளாகும்.

ஈருள்ளிக் கிழங்கு 1 ஏக்கர் நட 1520 பவுண் கிழங்கு செல்லும் அதன் விலை 15 ரூபாய் முதல், 80 ரூபாய் வரையாகும். விதை நடுவதானால் 13 முத்தல் விலை 13 ரூபாய் விலையாகும். அனுபவியமாய், விதை செலவு கஷ்டப்படுகிறதென்று, கோவில் பட்டி பண்ணைப் பாரம் மானேஜராயிருந்தமிஸ்

* ஏக்கருக்கு ரூ 500 முதல ரூ 1000 வரை மாருல் பெருவதாகத் தான் நாம் பார்த்தும் கேட்டும் அனுபவித்தும் இருக்கிறோம். ப. ர.

டர் திருமுருகதாஸ பிள்ளை யவர்கள் செவ்வல்பட்டி முதலிய கிராமங்களில் 700 800 ஏக்கர் நிலம் வரையில் நாத்துப்பாவி சாகுபடி செய்ய ஏற்பாடு செய்தார்கள். ஷெம் பிள்ளை யவர்களுக்குப் பின் வந்த மானேஜர்கள் போதனை குறைவால் திரும்பவும் கிழங்குவைத்து பயிராகிவருகிறது. விரை எடுப்பது கிழங்கு வைத்து புஷ்பித்த செடிகளில், விரை பெருக்கவேண்டும். விரையில் உற்பத்தியான கிழங்கில், புஷ்பித்த விரை சரியாய் பலிதமாவதில்லை. விரை தேவையானால் கிழங்கு வைத்து விரை எடுப்பது நலம். விரையில் உற்பத்தியான கிழங்கு, புஷ்பித்த விரை பயனில்லை யென்பதை கோவில்பட்டி பிந்திய மானேஜர் போதியாததால் விரை விருத்தி யின்றது போலும். இந்த மாதிரி விதை கிருஷிகன் சந்தாதாரர்களுக்குச் சப்ளையாய், விரை முளையாமல், நஷ்டமாயிருக்க வேண்டும். கிழங்கு வைத்துண்டான விரையை யனுப்பாமல், விரை நாத்துப்பாவி நட்ட கிழங்கில் உண்டானவிதையனுப்பி நேரே முளையா திருக்கலாம், விரை எடுப்பதில் கிழங்கு நஷ்டம் சம்பவிக்கும். கிழங்கு நஷ்டத்துக்காக, அமைந்த விரையை யனுப்பி வியாபாரிகள் மோசம் செய்து விடுகிறார்கள். ஆதலின் நாம் விரை தயார் செய்ய வேணுமென்று வேண்டுகிறோம், விரை புதுசானால் இரும்புச் சட்டியில் போட்டுத் தீ மூட்டி வருக்கவேபொரியும். பழையவிரை கருகிவிடும். விரை சோதித்து நாத்துப் பாவுவதவசியம், விரை 6 மாதத்துக்கு மேல் முளைப்பு சக்தி போய் விடும். எப்பவும் புதுவிரை தயார் செய்வது நலம்

விரை தயார் செய்ய முயல்வோர் நல்ல புழுதி நாத்தங்கால் தயார் செய்துகாலும் வரப்புகளுமாகக் கட்டி வரப்பு விலாப்பக்கம் திரட்சியான கனத்த கிழங்கு வைத்து தக்க உரம் ஜலம் பாச்சல், களை எடுத்தல், தவறுமல் செய்ய வே 1 மாதத்தில், புஷ்பித்துப் மாதத்தில் விரை தயார் செய்யலாம், புஷ்பத் தண்டு பழுத்த மஞ்சள் நிறமானவுடன் தண்டுடன் அறுத்து ஓலைப் பாயில் 3 நாளுலர்த்தி, விரையைத்தட்டி எடுத்துக் கொள்ளலாம். ஏக்கருக்கு வேண்டிய விரை 3_4 செண்டு நிலத்தில் கிழங்கு நட்டால் போதியதாக விருக்கும்.

வே. ப. திருமலையப்ப முதலியார்
வெள்ளகால் போஸ்டு

CORRESPONDENCE.

கடிதம்

ஐயா,

பிரபவ வருஷம் தாங்கள் பாங்கு நெல்லைப்பற்றி 4, 5 தொகுதிகளில் வியாசம் வரைந்திருக்கிறீர்கள். அதில் சில சந்தேகம் இருக்கிறது. அதை தெரிவிக்கக் கோருகிறேன். பாங்கு நெல் புழுதியில் நாற்று விட்டு இன்று நோனாகிறது. எப்பொழுது நடவேண்டியது? செழ்வாகுப் பயிருக்கு புழுதி

யாக உழுது, பின் பாத்தி கட்டி தண்ணீர் இறைத்து புழுதியில் கலக்கி நடும்மாதிரி இந்தபாக்கு நாற்றை நடலாமா? இல்லாவிட்டால் சாதாரணமான நெல்லுக்கு சேற்றில் உழும் மாதிரி உழுது நடவேண்டுமா? இதற்குத்தெளிவாகப் பதில் எழுதும்படி கோருகிறேன். இப்படிக்கு

கே. என். ராமாநுஜாசாரியார்.

பதில்

ஐயா, தங்கள் பி. எல். 721-28 கார்டு கிடைத்தது. பதில் பெற விரும்புவோர் ரீப்ளை கார்டு அனுப்பினாலொழிய பதில் அனுப்புவதில்லை. தாங்கள் சந்தா நம்பரும் தெரிவிக்கவில்லை. ராவ் பஹதூர் ஜெ. செல்வரங்கராஜு அவர்கள் திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். ஆகையால் நான் பதில் எழுதுகிறேன். தாங்கள் கேழ்வரகுப் பயிரைப்போல் சாய்ச்சலும் பாய்ச்சலுமாக தண்ணீர் கட்டுவதாகில் புழுதியில் தண்ணீர் பாய்ச்சி கேழ்வரகைப்போல் நடவேண்டும். எப்பொழுதும் சேர் இருக்கும்படி தண்ணீர் விடுவதாகில் அப்போது சேற்றில் உழுது சேர் அழுகிய பின் நடுவது நலம். ஆகையால் தாங்கள் கேழ்வரகைப் புழுதியில்தண்ணீர் பாய்ச்சி நடும்மாதிரி இந்தநெல்லை நட உத்தேசித்தால் புழுதியில் தண்ணீர் பாய்ச்சிக் கேழ்வரகுப் பயிருக்குக் கலக்குவதுபோல் கலக்கி நடவேண்டியது.

ஜே. ஆர். ரங்கராஜு.

ஃ ஃ ஃ

கனம் திரு. செல்வரங்கராஜு அவர்களுக்கு கும்பகோணம் எம். கருப்பண்ண சாமி நாட்டார் எழுதிய விருப்பம், நாரதர்மலை விவசாய கைத்தொழில் கண்காக்ஷியில் புதுக்கோட்டை சமஸ்தானத்து விவசாய பாரம் மானேஜர் உபந்யாசத்தில் குறிப்பிட்டுக்காட்டிய லேசான மெண்டன் இரும்புக் கலப்பை உழுது பார்ப்பதற்கு வேண்டியதிருக்கிறது. ஆகையால் அது கிடைக்கும் விலாசத்திற்கு விபரம்எழுதவும்.கிருஷிகன் வாயிலாய்வெளியிடக் கோருகிறேன்.

எம். கருப்பண்ணசாமி நாட்டார்.

பதில்

கும்பகோணத்திலிருக்கும் விவசாய டிமான்ஸ்டிரேட்டர் அவர்களுக்கு எழுதினால் அவர்கள் அந்த கலப்பை கொண்டு வந்து இனமாய் உழுது காட்டுவார்கள்-

ய. ர.

ஃ ஃ ஃ

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் 14—5—28ல் எழுதிய லெட்டர் கிடைத்தது. தங்கள் கடிதப்பிரகாரம் எலுமிச்சம் பழங்கள் அனுப்ப வேண்டுமென்றிருந்தேன். காய்கள்

முத்தாமல் இருந்ததினால் விதைகளுக்கு நன்றாகப் பழுத்த பழங்களை அனுப்பல்லாமென்றிருந்தேன். இதற்குள் சென்ற 4 தினங்களாகப் பெருங்காற்று அடித்து எல்லாக் காய்களும் பழுக்கிறதற்குள் விழுந்து விட்டன. ஆகையால் இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்கு நன்றாக முற்றின பழங்கள் கிடைக்காது என்பதைத் தெரிவிக்க விசனிக்கிறேன்.

இது விஷயமாகத் தாங்கள் கிருஷிகனிலும் இன்னும் 3 மாதங்களுக்கு பழங்கள் அகப்படாது என்றும் பிஞ்சுகள் முதல் கொண்டு காற்றில் அடிபட்டு விழுந்து விட்டது என்றும் ஆகையால் அனுப்ப முடியவில்லை என்றும் பிரசுரிக்கக் கோருகிறேன்.

இப்படிக்கு
பெ. ராமசாமி ரெட்டி.
ஓமண்டூர்

ஃ ஃ ஃ

ம-ா-ா-ஸ்ரீ மகா கனம் தஞ்சை ஐயா கிருஷிகன் மானேஜரவர்கள் சமுகத்திற்கு, 1583 நீர் சந்தாதாரர்கள், நாராயணசாமி ரெட்டி மிகவும் வணக்கமாய் எழுதிக்கொண்டது உபயக்ஷேமங்களுக்கும் பகவான் கிருபை:—

தங்களால் அடியேனுக்குப் பார்சல் செய்யப்பட்டிருந்த பாங்கு நெல்லை புழுதியில் நாற்றுப்பாவி யிருந்ததில் சிலது முளைத்தும் சிலது முளைக்காமலு மிருந்ததுடன் முளைத்து வந்தபயிரும் சுமார் ஒருமாதத்தில் கருகிப் பட்டுப்போய் விட்டது. பூமியில் போதுமான ஈரமில்லாததால் இப்படி நடந்திருக்கலாமென்று நினைப்பதற் கிடமில்லை, புழுதியில் கொஞ்சமும் தொழியில் கொஞ்சமும் நாற்றுவிட்டுப் பார்க்கவேணுமென்ற ஆவலிருப்பதால் அடியேன் பேரில் கிருபை கூர்ந்து நன்றாய் முளைக்கக்கூடியபாங்கு நெல்விதை யிருந்தால் பட்டணம்படியால் 10 படி நெல்லாவது எனது விலாசத்திற்கு அனுப்பக் கோருகிறேன்.

நெல்கிரயமும் ஏற்படும் வி. பி, சார்ஜ் செலவும் இவ்வளவென்று முன்னமே தெரியப்படுத்தினால் முன்னமேயே ரூபாயை மணியார்டர் செய்து விடுகிறேன். 1928ம்வூ மேமாதம் கிருஷிகன் வால்யும் XI பிரதி 2. பக்கம் 33ல். 15 வது வரியில் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கு (ரேகல் சுழி [மோட்வீல்] என்ற சக்கரத்தை உபயோகப் படுத்தலாம், மரச்சக்கரத்தை விட இது சீக்கிறமாகச் சுற்றுகிறது, அது ஓட்டுகிறவர்களுக்கும் சிரமமில்லை என்றெழுதி யிருப்பதால் அந்தக் கமலைக் கருவியைப் பற்றிய விவரமும் அது இரைப்பதற்கு லாயக்கான கருவி யென்று தெரிந்தால், அது விற்பனையாகு மிடமும், அடியிற்கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்க வேணுமாய் ரெம்பவும் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன். பதிலுக்கு ஒரு அணாஸ்டாம்பும் இத்துடன் சமுகம் அனுப்பியிருக்கிறேன்.

இதற்கு முன் ஒரு சிருபம் பாங்கு நெல் விஷயத்தைப்பற்றி பதில் எழுதும்படி ஒரு அணாஸ்டாம்புடன் ஒரு கடிதம் எழுதியிருந்தேன், அதற்கு

யாதொரு விதமாகவும் பதில் இல்லாததைப்பற்றி ரொம்பவும் வருந்துகி றேன். என்ன குற்றமிருப்பினும் மன்னிக்கக் கோருகிறேன். ஓம் பாண் டுரெங்க ஜெயசித்தாராம் பிரபு அவர்களின் திருப்பாத ஆலிங்கனமும், தா ஸானு தாஸனுமான

தங்கள் அன்பிற்குரிய

எஸ். நாராயணசாமி செட்டி.

பதில்

சில வருஷங்களுக்கு முன் பாங்கு நெல்லை திருநெல்வேலி ஜில்லா பாளை யங்கோட்டையிலிருக்கும் நமது சொலவாணிக்கபுரம் தோட்டத்தில் எந்த இடத்தில் விதைக்க உத்தேசித்தோமோ அந்த இடத்திலேயே விதைத்து கேள்வரகுக்குத் தண்ணீர் இறைப்பதைப்போல் வாய்ச்சலும் பாய்ச்சலுமாய் தண்ணீர் இறைத்து சரியான பலனடைந்த அனுபவமிருக்கிறது. கோயில் பட்டி முதலிய சில சர்க்கார் பண்ணைகளிலும் கேள்வரகு நடுவதைப்போல் நட் டும் பயிர் சரிவர வளர்ந்து மகசூல் கொடுத்திருக்கிறது. தங்கள் பயிர் தீய்ந்து போனதற்குப்போதிய காரணம் இன்னமாய்த்தான் இருக்குமென்று எம்மால் யூகிக்கக்கூடவில்லை. நாம் நேரில் பார்த்தால் ஒருச்சால் சொல்லக்கூடும்.

சென்ற மூன்று வருஷங்களாகப் போதிய மழையில்லாததால் இவ்வரு ஷம் ஜெகன்னாதபாக் தோட்டத்திலிருக்கும் கிணறுகளில் தண்ணீரில்லாமல் போய்விட்டது. ஆகையால் அருமையாய் வளர்த்த பலஜினுசு பழவிருக்ஷங்களை யே பஞ்சகாலத்தில் பிள்ளைகளைப் பறிகொடுப்பதைப் போல் தண்ணீர்த் தட்டால் காயும்படி விட்டுவிட்டு இருக்கும்போது நாம் பயிர் செய்த பாங்கு நெல்லின் கதி என்னவாயிருக்குமென்று நாம் சொல்லாமலே அறிந்து கொள்ளலாம். ஆகையால் நம்மிடம் பாங்கு நெல் இல்லை. நல்ல விதைக்காக பல இடங்களுக்கு எழுதியிருக்கிறோம். நல்ல விதை அகப்பட்டால் தெரி விக்கிறோம்.

சாதாரணமாய் தபால் முத்திரை வைத்து எழுதும் கடிதங்களுக்கு சாத் தியமான போதெல்லாம் விடையளிப்பதே எமது வழக்கம். ஆனால் சில சமை யங்களில் பல பயிர்களைக் குறிப்பிட்டு "அவைகளின் வளர்த்தியைப்பற்றிய எல்லாவிஷயங்களும் தெரிவிக்கவும்" என்று சில சந்தா நேயர்கள் எழுது கிறார்கள். ஒவ்வொரு பயிரும் பல சஞ்சிகைகளில் வெளிவரும் விஷய மாத லாலும், பல பயிர்களைப்பற்றி பதில் எழுதல் சாத்ய மில்லை யாதலாலும் அப்பேர்ப்பட்ட கடிதங்களுக்குப் பதில் தரமுடியவில்லை.

"ரோல் ஈசி மேட்வீல்" என்னும் கவலைச் சக்கரமானது அதிக சுலப மானதும் உபயோக முள்ளதுமான இயந்திர மென்றே நாம் நினைக்கிறோம்.

எல்லா விவசாய டெப்டி டைரெக்டர்களிடமும் கிடைக்கும். தங்களுக்குச் சமீபமாயுள்ள விவசாய டெப்டி டைரெக்டர் அவர்களுக்கு எழுதினால் விலை

விவரம் முதலியன தெரிவிப்பார்கள். தங்களுக்கு மதுரை விவசாய டெப்டி டைரெக்டர் சமீபமாய் இருக்கும் உத்யோகஸ்தரானதால் அவருக்கு எழுதி விலை முதலிய விவரங்கள் அறிந்து கொள்ளலாம். அதைவாங்கி உபயோகித்தால் மாடுகளுக்கு சுலபமாயிருக்குமென்று நம்புகிறோம்.

ப. ர்.

ஃ ஃ ஃ

ஸ்ரீமான் கிருஷிகன் பத்திராதிபர் ராவ்பஹதூர் ஸ்ரீமான் கன்னியமிக்க புண்யசீலர் ஜெ. செல்வரங்க ராஜு துரை அவர்கள் திவ்ய சமுகத்திற்கு 1945ம் நெம்பர் சந்தாதார் எஸ். முத்துக் காமாக்ஷி பிள்ளை வந்தனம் செய்து எழுதிக் கொண்ட கடிதம் தங்களுடைய கிருஷிகன் பத்திரிகையான வைகாசி மாதம் எனக்கு அனுப்பியதைப் பார்வையிட்டதில் 32, 33 பக்கங்களில் சொல்லப்பட்டிருக்கிற 1 மெஷ்ட்டன் இரும்புக்கலப்பை ரூ 8-8-0 யாக யிருந்தது: இப்போது ரூ 3-8-0க்கு வந்திருக்கிறது: என்று கண்டிருக்கிறது: 2 கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க ரோல் சுசி மோட்வீல் என்ற சக்கரத்தை உபயோகப்படுத்துவதினால் ரெம்பவும் சிலாக்கியம் என்றும்சொல்லப்பட்டிருக்கிறது: ஆகவே ஷை இரண்டு சாமான்களும் எவ்விடத்தில் கிடைக்கும்? அதன் விலாசம் தெளிவாகத் தெரிந்தால் வரவழைத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்- ஷை சாமான்கள் இரண்டும் எனக்கு அவசியம் வேண்டியிருக்கிறது. ஆனதால் தாங்கள் தயவு செய்து இந்த கிருஷிகனில் பதில் எழுதும்படி கோருகிறேன்: 3, தாங்கள் அனுப்பும் பத்திரிகையில் கடைசி பக்கத்தில் ஏற்பட்டிருக்கிற பஞ்சாங்கத்தில் விபவஷூ என்பதற்கு பிரபவ வருஷம் என்று போடப்பட்டிருக்கிறது, அது அச்சுப் பிழை என்று நினைக்கிறேன்: 4, ரோல் சுசி மோட்வீல் என்ற சக்கரத்துடன் மற்ற கவலைச் சாமான்களும் இரும்பினாலே யாகிறதா என்ற விபரமும் அப்படி இருந்தால் அதின் விலை விபரங்களும் தெரிவிக்கக் கோருகிறேன் ரோல் சுசி மோட்வீல் சக்கரத்தின் விலையும் தெரிவிக்க வேணும்: ஆகையால் மற்ற விபரங்களுக்கும் நான் நடந்து கொள்ள வேண்டியதற்கும் தங்களுடைய அன்பான பதிலை எதிர்ப் பார்த்திருக்கிறேன்:

S. முத்து காமாக்ஷி பிள்ளை

பதில்

(1ம் 2ம்) மேலே கண்ட சந்தாதாரர்களுக்குக் கொடுத்த விடைகளைப் பார்க்க:

: பஞ்சாங்கத்தில் அச்சுப் பிழையால் விபவ என்று போடுவதற்குப் பதிலாக சென்ற 2 மாதங்களாகப் பிரபவ என்று தவறுதலாய் போடப்பட்டிருக்கிறது; தயவு செய்து அப்பிழையைத் திருத்திக் கொள்ளுமாறு சந்தாநேயர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்:

4 சோல் ஈகி மோட்டில் ஒன்றுதான் இரும்பில்செய்யப்பட்டிருக்கிறது- மற்றவைகள் சாதாரண வேலைச் சாமான்களே, சக்கரம் தவிர மற்றவை எல்லாம் இரும்பால் செய்யப்படவில்லை- ப: ர°

ம-ா-ா மகா கனம் பொருந்திய கிருஷிகன் பத்திராதிபவரவர்கள் சமூகத்திற்கு,

திண்டுக்கல் தாலுகா அம்பாதுரை போஸ்டு ஆலமரத்துபாடியில் இருக்கும் A. L. ஸ்ரீனிவாசலு நாயடு எழுதிக் கொண்டது,

(1) ராமச் சந்திரன் ஏற்றம் என்பது தண்ணீர் இறைப்பதற்கு சௌக்கியம் என்பது தங்கள் பத்திரிகை மூலமாகத் தெரிகிறது. அப்படியானால் அதற்காக ஷை ஏற்றம் தருவிக்கவும் விபரங்கள் தெரியவேணுமானால் யாருக்கு எழுதினால் அதன் விபரம் நன்றாய்த் தெரியும்? அவர்கள் அட்ரஸ தெரிவிக்க வேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன். தவிர கினியா புல்விதை யாருக்கு எழுதி தருவிக்கலாம், அதன் விபரமும், விவசாய சம்மந்தமான பயிர் செய்யவும் எருவிடவும் அதுகள் விபரமாய் எழுதி அச்சிட்ட புஸ்தகம் யாரிடமிருந்து தருவிக்கலாம்? அதுகள் விபரமும் எழுதும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். உடனே பதில் எழுதுவதற்காக 1 அணா ஸ்டாம்பு இத்துடன் வைத்து அனுப்பிஇருக்கிறது. விபரமாக பதில் எழுதக் கேட்டுக் கொள்ளுகிறேன்,

A. L. ஸ்ரீனிவாசலு நாயுடு
(திண்டுக்கல் தாலுக்கா)

பதில்

1. ராமச்சந்திர ஏற்றம் செய்து விற்கும் ம-ா-ஸ்ரீ 'ராமச்சந்திரன்' என்பவர் தற்காலம் சென்னை இராஜதானியை விட்டு, மஹாத்மா காந்தியவர்கள் வசிக்கும் பம்பாய் இராஜாதனியிலிருக்கும் 'சபர்மதி' ஆஸ்ரமத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டோம். அவர்கள் மறுபடியும் சென்னைக்குத் திரும்பி வந்துவிட்டதும் வராததும் நமக்குத் திட்டமாய்த் தெரியாது, ஆயினும் சென்னப்பட்டணம்மைலாப்பூர்சென்ட்ரல்அர்பன்பாங்க் காரியதரிசிம-ா-ஸ்ரீ, ரங்கசாமி அய்யங்காரவர்கள் பார்வையிட்டு ராமச்சந்திர ஏற்றம் செய்யும் ம-ா-ஸ்ரீ ராமச்சந்திர ஐயரவர்களுக்கு கொடுப்பது என்று எழுதினால் அவருடைய விலாசத்திற்கு அனுப்புவார்கள் என்றாம் அவரை சென்றடிசம்பர்யீ சந்தித்தபோது தெரிவித்தார்கள்: ஆகையால் அவ்விலாசத்திற்கு எழுதுவது நலம்-

2: கினியாபுல் விதைபோட்டு உண்டாக்குவதை விட புல் முதல்கள் வைத்து உண்டாக்குவது மிகவும் சுலபம். ஷை புல் முதல்களைப் பற்றி மதுரையிலிருக்கும் விவசாய டெப்டி டைரெக்டர் அவர்களுக்கு எழுதினால் அவர்கள் எங்கிருந்தாவது திட்டமாய் வரவழைத்துக் கொடுப்பார்கள்;

3. விவசாய சம்மந்தமான புஸ்தகம் தேவையானல் செங்கல்பட்டு ஜில்லா பொன்னேரி தாலூகா: பெரியபாளையம் போஸ்டு பென்ஷன்ட் விவசாய இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் ஜி: இராஜகோபால் நாயுடு அவர்களுக்கு எழுதி ரூ: 1—4—0 விலையுள்ள விவசாய விளக்கம் என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசிக்கலாம்.

இந்திரிய வஸ்துக்களடங்கிய எலும்புத்தூள், ஐவ்வு, கொம்புசீவல், கொளம்புசீவல், புண்ணாக்குகள் முதலிய நிலவளத்தை அதிகப்படுத்தும் உரங்கள் தேவையானல் ஏ: ஜெ. ரோட்ரிக்ஸ் அண்ட் கோ, எரு வியாபாரிகள் கடம்பூர் என்ற விலாசத்திற்காவது, பிரசிடென்சி மெனியூர் வர்க்ஸ், ராணிப்பேட்டைக்காவது, ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி கோயம்புத்தூருக்காவது எழுதிப்பெறலாம்.

தொழு எரு, பசுந்தாள் எரு முதலியவைகள் போதுமான அளவு அகப்படா விட்டால் அவைகளுடன் கலந்து உபயோகிக்கக் கூடிய அிந்திரிய வஸ்துக்களடங்கிய செயற்கை உப்பு எருக்கள் தேவையானல் பர்டிலைசர் ப்ராபகரண்டா ஆப் இந்தியா லிமிடெட் தபாற் பெட்டி 30 மதராஸ், பாரி கம்பெனி ராணிப்பேட்டை முதலிய வியாபாரிகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம். ப. ர.

News & Notes

குறிப்புகள்

அனகாபல்லி சர்க்கார் பண்ணையில் இவ்வருஷம் பிப்ரவரி மாதத்தில் கரும்பு ஆலை ஆடி சற்சோதனை செய்தார்கள். ஏக்கர் ஒன்றுக்கு 13103 ராத்தல் வெல்லம் அகப்பட்டது. அதாவது 26 பாரம் இது திருப்திகரமான மாசூலே.

அத்துடன் அவ்விடத்திலேயே ராம் நாராயண பானர்ஜி அவர்களால் செய்யப்பட்ட கரும்பு ஆலைக்கும், கிர்லோஷ்கர் கம்பெனியாரால் செய்யப்பட்ட கரும்பு ஆலைக்கும் தாரதம்மியம் கண்டு பிடிக்கும்படி பரீட்சைகள் செய்து பார்த்ததில் ராம் நாராயண பானர்ஜி அவர்களால் செய்து விற்கப்பட்ட ஆலையானது 100 க்கு 67-8 பாகம் கரும்பு சார் பிழிந்ததாகவும், கிர்லோஷ்கர் கம்பெனியின் கரும்பு ஆலை 100 க்கு 71.5 பாகம் சார் கொடுத்ததாகவும் ஆகையால் உள்ளூர் ஆலையைவிட கிர்லோஷ்கர் கம்பெனியாரால் செய்யப்பட்ட கரும்பு ஆலையே சிலாக்கியமானதென்றும் கண்டுபிடித்தார்கள்.

"கிருஷிகன் பஞ்சாங்கம்

விபவஸூ ஆடிமீ—சாலிவாகன 1850 கலியுகாதி. 5029, பசலி 1338
கொல்லம் 1103, ஹிஜ்ரி 1347 இங்கிலீஷ் 1928 ஜூலை-ஆகஸ்டுமீ

[illegible]	ஜூலை	ஆடி	வாரம்	திதி	நக்ஷத்திரம்	யோகம்	விசேஷங்கள்
27	16	1	தி	சது 16-3	திரு22 14	சி22அ	காலை கதிரறுக்க
28	17	2	செ	● அ10_39	புன18-58	சி60	கரிநாள்
29	18	3	புத	பர 7-43	பூச 18-0	சி60	ஆபரணம் பூண
1	19	4	வி	துதி 4-47	ஆயி17-17	சி17அ	ஜபம் பூர்த்தி செய்ய
2	20	5	வெ	திரு 3-10	மக 17-47	ம18சி	மழை பெய்யலாம்
3	21	6	ச	சது 2-42	பூர 19-27	சி19ம	ஷை
4	22	7	ஞா	பஞ் 3-33	உத் 22-23	அ60	வித்யாரம்பம்
5	23	8	தி	சஷ் 5-41	அஸ்26-27	சி60	கிரையம் செய்ய
6	24	9	செ	சப் 8-59	சித் 31-41	சி60	மருந்து செய்ய
7	25	10	புத	அஷ் 13-4	சுவ 37-34	சி60	கரிநாள்
8	26	11	வி	நவ 17-47	விசா43.55	சி60	கிணறு வெட்ட
9	27	12	வெ	த 22-43	அநு50-20	சி60	காலை சீமர்தம்
10	28	13	ச	ஏ 27-27	கே 56-25	சி60	குளம் கிணறு வெட்ட
11	29	14	ஞா	து 31-36	மூல 60-1	அ60	பலவிருக்ஷம் வைக்க
12	30	15	தி	திரி 34-53	மூல 1-49	சி60	கிணறு சீர் செய்ய
13	31	16	செ	சது 37-6	பூரா6-14	சி60	கடன் தீர்க்க
14	1	17	புத	○ 38_4	உத் 9-31	அ10சி	சீமர்தம்
15	2	18	வி	பிர 37-46	திரி 11-27	சி60	கொட்டகை கட்ட
16	3	19	வெ	துதி 36-24	அவி12-25	சி60	மழை பெய்யலாம்
17	4	20	ச	திரி 33_34	சத 11-57	அ12ம	கரிநாள்
18	5	21	ஞா	சது 29-54	பூர 10-30	சி11அ	ஏற்றம் நட
19	6	22	தி	பஞ் 25-21	உத் 8-7	சி60	கிருஷியாரம்பம்
20	7	23	செ	சஷ்20-10	ரே 5-4	சி60	ராஜதரிசனம்
21	8	24	புத	சப் 14-33	அசு 1-28 பர 56-1	ம2சி	அடுப்பு போட
22	9	25	வி	அஷ் 8-29	*கா53 21	ம60	கார்த்திகை விரதம்
23	10	26	வெ	நவ 2-26 தச54-6	ரோ49-18	ம49சி	கிணறு வெட்ட
24	11	27	ச	ஏ 50-33	மிரு45-29	சி60	மழை பெய்யலாம்
25	12	28	ஞா	து 46-16	திரு 42-8	சி60	பிசாசு ஓட்ட
26	13	29	தி	திரி40-39	புன 39-26	அ39சி	பந்தக்கால் நாட்ட
27	14	30	செ	சது 36-49	பூச 37-30	சி60	வியாதியஸ்தர் குளிக்க
28	15	31	புத	● அ34-1	ஆயி 36:7	சி60	ஆடியமாதி

இராஜம்பாள், மோஹன சுந்தரம்,
ஆநந்த கிருஷ்ணன், சமுத்ர காந்தா,
இராஜேந்திரன், விஜயராகவன்,
வரதராஜுலு, (1, 2, பாகம்).

மேற்சொன்ன எட்டு புஸ்தகங்களும் ஒன்றைவிட ஒன்று மேலே சொல்லியிருக்கும் விஷயங்களைத் தாங்கி "நான் முன் நான் முன்" என ஆர்ப்பரித்து ஆநந்தத்தை விளைவிக்கின்றன.

மேற்சொன்ன ஒவ்வொரு புஸ்தகத்திலும் ஸ்திரீ, புருஷ பாலக பாலிகைகளுக்கு யுக்தமான அநேக அதிசயமான விஷயங்களும், இப்படிப்பட்ட வேண்டிய (அபார சக்தியுடன்) செய்யும் தந்திரங்களும், நீதி விஷயங்களும், (சன்மார்க்கிகள் அனுபவிக்கும் இன்பமும், துன்மார்க்கிகள் அனுபவித்த துன்பத்தைப் பற்றிய விஷயங்களையும்) தற்காலத்திற்கேற்றவாறு அநேக நயமான விஷயங்களும், பெரியோர் முதல் சிறியோரும், பெண்பாலரும் எளிதில் உணருமாறு, உயர்ந்ததும், அழகியதுமாய், (நல்ல காகிதத்தில் நன்றாய் அச்சிடப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகங்களில் காணும் ஒவ்வொரு விஷயங்களும் அறிவைப் பலப்படுத்தும் சக்தியுடையன.

இப்புஸ்தகங்களைப் போலவே புஸ்தகங்கள் இதுவரையில் தமிழ் பாஷையில் பிரசுரிக்கப்படவில்லை என்பது இவைகளை வாசித்த எல்லாருடைய அபிப்பிராயம். இவைகளைப் புகழ்ந்து எழுதியிருக்கும் நற்சாக்ஷிப் பத்திரங்கள் எம்மிடம் ஆயிரக்கணக்காயிருக்கின்றன. ஒவ்வொரு அருமையான புஸ்தகங்களையும் வாசித்து ஆநந்தமடையவேண்டுமென்னும் பிரியமுடையோர் முதல் நான்கு நாவல்கள் ஒவ்வொன்றும் அணா 12-ம், மற்றவை ஒவ்வொன்றும் ரூ. 1 என்று குறைக்கப்பட்டிருக்கிறது. தபால் கூலி, வி. பி. கமிஷன் பிரத்தியேகம்.

ஒரு புஸ்தகம் வி. பி. யில் பெறுபவர்களுக்குத் தபால் செலவு 6 அணாவும், 2 புஸ்தகங்கள் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு 8 அணாவும், 3 புஸ்தகங்களுக்கு 10 அணாவும், 4 புஸ்தகங்களுக்கு 11 அணாவும் புஸ்தகங்களின் விலைக்குமேல் அதிகமாகும் என்பதைக் கவனிக்க கோருகிறோம்.

வேண்டியவர்கள்:—

ரங்கராஜு அண்டு பிரதர்ஸ்.

"ஜெகந்நாயகி" சைதாப்பேட்டை போஸ்ட் சென்னை,

அல்லது ஸ்ரீ வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

இதைவிட

வேறு அத்தாக்ஷி என்ன?

இராஜாம்பாள்	23-ம் பதிப்பு
சந்திரகாந்தா	13-ம் பதிப்பு
மோஹன சுந்தரம்	12-ம் பதிப்பு
அநந்தகிருஷ்ணன்	11-ம் பதிப்பு
இராஜேந்திரன்	9-ம் பதிப்பு
வரதராஜம்	[illegible]-ம் பதிப்பு
விஜயராகவன்	2-ம் பதிப்பு

வெளிவந்தே இவைகளின் பெருமையைக் காட்டுகின்றன. இத்தனை பதிப்புகள் வெளிவந்தது தமிழ் நாட்டில் இதுவரையில் கேட்டறியாத அச்சரியமல்லவா? இராஜேந்திரன், வரதராஜம் (முதல் பாகம், இரண்டாம் பாகம்) விஜயராகவன் ஒவ்வொன்றும் விலை ரூபா 1.

மற்ற நான்கு நாவல்கள் தனித்தனி விலை அணா 12

போஸ்டேஜ் வி. பி. பிரத்யேகம்.

இந்த எட்டு நாவல்களில் எதையாவது ஒன்றை வாங்கினால் மற்ற ஏழு நாவல்களை வாங்கும்படி அதன் சுவையே சட்டமாய்த் தூண்டுமென்பது நிச்சயம்.

இந்த அபூர்வ நாவல்கள் வேண்டுவோர்,

ரங்கராஜு பிரதர்ஸ்,

"ஜெகந்நாதபாக்" சைதாப்பேட்டை போஸ்ட்

சென்னை என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெறலாம்.

இரு கிருஷிகர்களின் சம்பாஷணை

ரங்கசாமி பிள்ளை:—ரெட்டியார் அவர்களே! நேற்றையதினம் சாயந்திரம் தங்களைக் காண்பதற்காகத் தங்கள் வீட்டிற்கு வந்திருந்தேன். தாங்கள் வெளியில் போயிருப்பதாகச் சொன்னார்கள்.

பாஷ்யம் ரெட்டியார்:—ஆம் வாஸ்தவமே! நேற்று நடந்த கண்காட்சியில் பர்டிலைஸர் ப்ராப்பகான்டாவால் நடத்தப்பட்ட ஒளி விசித்திரப் பட காட்சியைப் பார்க்கச் சென்றிருந்தேன்.

ர. பிள்ளை:—அந்தக் காட்சியில் நடந்த விஷயத்தின் சாராம்சம் என்ன?

பா. ரெட்டியார்:—சொல்லுகிறேன். கேளுங்கள். உபன்யாஸம் செய்தவர் சொன்னதாவது: சாணியெருவைவிட சிறந்த எருவே உலகத்தில் இல்லையென்றும், நல்ல சாணியெரு கிடைக்காததால் ஸல்பேட் ஆப் அம்மோனியா, ஸூபர்பாஸ்பேட் முதலிய செயற்கை உரங்களை உபயோகிக்க வேண்டுமென்றும் இவ்விதம் இச் செயற்கை உரங்களை உபயோகித்தால் நிலத்தின்கண் விளைவை அதிகரிக்கச் செய்யலாம் என்றும் சொன்னார். இத்துடன் பர்டிலைஸர்ப்ராப்பகாண்டா ஆப் இந்தியா லிமிடெட் என்னும் கம்பெனியாரின் பிரதிநிதிகளும் பிரசாரகர்களும் நம்முடைய நிலங்களைப் பரிசோதித்து அவைகளினுடைய இயல்புக்குத் தக்கவாறு உரங்களைச் சிபார்சு செய்கிறார்கள். இவர்கள் விவசாய இலாகாவின் கொள்கைக்கு ஏற்றவாறு உரங்களை சிபார்சு செய்கிறதனால், அநேகமாய் எல்லா மிராசுதார்களும் இவர்களுடைய உரங்களை வாங்குகிறார்கள் என்றும் எடுத்துக் காட்டினார். சல்பேட் ஆப் அம்மோனியா ஸூப்பர்பாஸ்பேட் முதலிய உரங்களை இந்திரிய வஸ்துக்களுடன் கலந்து உபயோகிப்பதால் கிடைக்கும் ஜாஸ்தி மாகூல படங்கள் மூலமாய் காண்பித்தார்கள்: ஐக்கிய விவசாயச் சங்கங்களின் கிருபணைப் பண்ணைகளில், எல்லா அபிவிருத்திகளுடன் இவ்வுரங்களையும் உபயோகிப்பதால் கிடைத்த அதிக மாகூல படங்கள் மூலமாய் செவ்வனே விளக்கிக் காண்பிக்கப்பட்டது.

ர. பிள்ளை:—இவ்வுரங்களை உபயோகிப்பதால் நிலத்தின் தன்மை கெட்டு விடுகிறதென்றும் இவ்வுரங்களை உபயோகித்தால், ஜீவாதாரத்திற்கு ஏதுவான பிராணபிவிர்த்தினி (வைட்டாமின்) என்னும் சத்து இல்லாததனால், இவ்வுரங்களின் பயனைக் கிடைத்த தானியங்களை உண்பது சக்கைக்குச் சமானமென்றும் சிலருடைய அபிப்பிராயம்:

பா ரெட்டியார்:—விவசாய இலாகாவின் அதிகாரியான டைரெக்டர் தலைவர்களே, அவர்கள் செய்யும் பிரசங்கங்கள் தோறும் ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸூபர்பாஸ் பேட்டையும் நாம் வழக்கமாய் உபயோகிக்கும் தொழு எருவில் பாதியளவாவது அல்லது மூன்றில் ஒரு பங்களவாவது உபயோகிக்கும்படிச் சொல்லுகிறார்கள் அல்லவா? இவ்விதம் இயற்கை உரங்களையும் செயற்கை உரங்களையும் கலந்து உபயோகிப்பதால், விளைநிலம், கால வேறுபாடுகள் முதலியவற்றிற்குத் தக்கவாறு பயிரிடுவது ஒவ்வொரு மிராசுதாரரின் கடமையென்றும் வற்புறுத்தினார்கள், இனி நாம் அவருடைய புத்திமதிகளுக்கேற்றவாறு, நவீன விவசாய முறைகளையே கையாட வேண்டும். இன்று முதல் செயற்கை உரங்களை நாம் அதிகமாக வாங்கவேண்டும்.

ந. பிள்ளை,— நீங்கள் சொல்வதிருக்கட்டும் புஸ்தகத்தைப் படித்து விட்டு உபன்யாசம் செய்யும் இவர்கள் பேச்சை நம்பிச் செய்வது "எட்டுச் சுரைக்காய் கறிக்குதவும்" என்று நினைப்பது போலல்லவா இருக்கிறது. இவர்கள் சொற்படி நாம் பயிரிடுவோமானால், நமக்கு ஏதாவது மிஞ்சுமா?

பா. ரெட்டி:— நன்றாயக் கேட்டீர், நான் இதற்கு முன் எனக்குக் கிடைத்த சாணி எருவை என் நிலங்களில் பாதிக்கு உபயோகித்து, பாதிக்கு எருப் போடாமலே பயிரிடுவது வழக்கம். பார்டிலைஸர் ப்ராபகாண்டாவின் பிரசாரங்கள் சொற்படிக்கு நான் 3 வருஷக்காலமாய் எனக்குக் கிடைக்கும் சாணியெருவை என் நிலங்கள் பூராவிலும் உபயோகித்து, இவைகள் எல்லாவற்றிற்கும் ஸல்பெட் ஆப் அமமோனியாவையும ஸூபர்பாஸ்பேட்டையும் உபயோகித்து வருகிறேன். இத்தனை வருஷமாய் எனக்குக் கிடைத்துக் கொண்டிருந்த லாபத்தை விட இப்பொழுது இரண்டு பங்கு கிடைக்கிறது. அப்படியிருக்கையில் நான் ஏன் இவ்வுரங்களை உபயோகிக்ககூடாது? இது மாத்திரமல்ல, நான் சாணி யெருவிலும கொஞ்சம உபயோகிப்பதனால் நிலத்தின் தன்மையும் விருத்தியாகிறது. ஆகவே இப்பொழுதாவது நீர் திருப்தி யடைந்தீரா?

ந. பிள்ளை— அதிருக்கட்டும், நம்மைப்போன்ற சுதேசிகள் அயல் நாட்டிலிருந்துவரும் வஸ்துக்களாகிய ஸல்பேட் ஆப் அம்மோனிய முதலியவைகளை வாங்குவது தர்மமாகுமா?

பா. ரெட்டியார்— நன்றாய்ச் சொன்னீர். நீர் சொன்னவை யாவும் தெரியாத்தனத்தால் என்று நினைத்து நான் வருத்தப்படுகிறேன். நம் தாய் நாட்டிலேயே வங்காளம், முதலிய அநேக மாகாணங்களில் ஸல்பேட் ஆப் அம்மோனியாவை ஏராளமாக உற்பத்தி செய்கிறார்கள். இப்படியிருக்கையில் இவைகள் அயல் நாட்டுச் சாமான்கள் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

ந. பிள்ளை— இப்பொழுதுதான் எல்லா விஷயங்களும் நான் தெரிந்து கொண்டேன். ஸல்பேட் ஆப் அம்மோனியா, ஸூபர்பாஸ்பேட் முதலிய உரங்களைப்பற்றிய விலைவிபரமும், இவைகள் கிடைக்கும் இடங்களும் இவைகளை உபயோகிக்க வேண்டிய முறை அளவு காலம், முதலியவைகளும் யாரைக் கேட்டால் தெரியவரும்?

பா. ரெட்டியார்— சென்னை அரமனைக்காரத் தெருவிலுள்ள ப்ரன்னர் மாண்ட் கம்பெனியார்களுக்காவது அல்லது பற்பல இடங்களுள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான டெப்போக்களுக்காவது, உமக்கு ஸமீபத்திலுள்ள மேற்படி கம்பெனியார்களின் பிரசாரகர்களுக்காவது எழுதினால் அவர்களால் இயன்ற உதவியைச் செய்யத் தயாராயிருக்கிறார்கள். தவிர ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸூபர்பாஸ்பேட்டையும் உபயோகித்த மிராசுதார்களின் அபிப்பிராயம் என்னும் இப்புஸ்தகத்தை ஒரு முறை படிப்பீரானால் உம்முடைய சந்தேகம் எல்லாம் பறந்துவிடும்.

ந. பிள்ளை— உம்மால் இன்று அநேக விஷயம் தெரிந்துகொண்டேன். இனி நான் இவ்விதமே செய்கிறேன். எனக்கு நேரமாய் விட்டபடியால் நான் போய் வருகிறேன் வந்தனம்.

பார்டிலைஸர் ப்ராபகாண்டா,
ஆப் இந்தியா லிமிடெட்,
தபால்பெட்டி 159 மதுரை,

கவனியுங்கள்

விவசாயத்தில் இப்போது அடையும் இலாபத்தைவிட அதிக இலாபம் பெற விரும்புகிறீர்களா?

அப்படியானால் இந்தியாவிலேயே இந்தியர்களாலேயே செய்யப்பட்ட இந்திரிய வஸ்துக்களடங்கிய இயற்கை உரங்களை வாங்கி உபயோகியுங்கள்.

நாங்கள் எலும்புத்தூள், ஜவ்வு, கொம்பு சீவல், புண்ணாக்குகள் முதலிய சகலமான எருக்களையும், அந்தந்த பயிர்களுக்குத் தக்க எருக்களைக் கலந்தும் தயாரித்தும் விற்கிறோம்.

இயற்கை உரங்களைச் சேர்க்காமல் தற்காலம் அதிக அட்டகாசப்படுத்தி விற்கும் செயற்கைஉரங்களாகிய உப்பு உரங்களைத் தனியாய் உபயோகித்தால் கெடுதல் சம்பவிப்பதைப் போலல்லாமல் எங்கள் இயற்கை உரங்களால் எப்போதும் நன்மையே உண்டாவதோடு நிலவளமும், நாளுக்கு நாள், வாரத்திற்கு வாரம் மாசத்திற்கு மாசம், வருஷத்திற்கு வருஷம்; அபிவிருத்தியடையும்என்பதில் சந்தேகமேயில்லை,

விலை முதலிய விவரங்களறிய விரும்புவோர்:—

ஏ. ஜெ. ரோட்ரிக்ஸ் அண்ட் கோ,

ஏஜன்ட்ஸ் கடம்பூர் எருக்கிடங்கு

கடம்பூர் (S. I. R.)

என்று எழுதி முழு விவரங்களறியலாம்.

TO LET

The Journal of the Madras Agicultural Students' Union.

A monthly Journal in English devoted to the Study of Improved Agriculture. Articles of Scientific and general interest are published along with Extracts & reviews from various Journals both Indian & foreign. Subscription per annum Rs Four. Single copy as Six.

Apply to Manager M. A. S. U. Journal.
AGRICULTURAL COLLEGE, LAWLEY ROAD P. O. *Coimbatore*

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

இந்த நாவல் "இது சிறந்த நாவல்" படிப்பதில் ஆர்வமுடையோர் புகழத்தக்கபடி நாவலுக்குரிய இலக்ஷணங்களுடன் அமைந்திருக்கிறது. இதனைப் படிக்கத்தொடங்கினால் முடிக்காமல் புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வாராது.

இது பால விநோதினிப் பத்திராசிரியராகிய வரகவி. திரு. அ. சுப்பரமண்ய பாரதியார் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச் சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும் நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம குணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேகமேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிறபடியால், இந்த நாவல், கேவலம் நாவல் வகையில் எண்ணிப் புறக்கணிக்கத்தக்கதல்ல; போற்றத்தக்கதேயாம்.

ஜெகன் மோகினி ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

விவசாய புத்தககள்

	ரு அ பை
விவசாய விளக்கம்	1—4—0
நெல்	1—0—0
கரும்பு	1—0—0
மா	0—7—0

தபால் சார்ஜ் வி. பி. முதலியன பிரத்தியேகம்

ஜி. இராஜகோபால் நாயுடு
பென்ஷண்ட் விவசாய இன்ஸ்பெக்டர்

Printed and Published by J. R. Ranga Raju at the Raju Press "Jagannatha Baugh" Saidapet (Madras;